

# பகுதி ஐந்து

## இன்றைய அவுஸ்திரேலியா

# இன்றைய அவுஸ்திரேலியா

இந்தப் பிரிவில், நீங்கள் அவுஸ்திரேலியாவின் கலாச்சாரம், புதுமைவாதிகள் மற்றும் தேசிய அடையாளம் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்வீர்கள். அவுஸ்திரேலியா, ஒரு ஆற்றல்மிக்க வணிகம் மற்றும் வர்த்தகக் கூட்டாளியும், மதிப்பிற்குறிய உலகளாவிய குடிமகனுமாகும். அவுஸ்திரேலியர்கள், நாட்டின் தொடர்ந்த வளர்ச்சி மற்றும் புதுமைப்படுத்தலுக்கு புதிதாய்ப் புலம்பெயர்ந்தோரது பங்களிப்பை மதிக்கிறார்கள்.

## அவுஸ்திரேலிய பூமி

உலகின் மிகப் பண்டைய நிலப்பரப்புகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்றாகும். இது உலகின் ஆறாவது பெரிய நாடும், மிகப்பெரய் தீவு நாடுமாகும். இது தான் மிகத்தட்டையானதும் மிக வரண்டதுமான பூமியாகும். அவுஸ்திரேலியாவின் பெரும்பகுதி மோசமான மண் கொண்டதும், குறைவான மழையளவு கொண்டதுமாக இருந்து, அதை விவசாயத்திற்கு ஏற்றதல்லாததாக்குகிறது. காய்ந்த உட்பகுதிகளை 'உள்ளகப்பகுதி' (The Outback) என்று அழைக்கிறோம், அதோடு அவை குறிப்பாகத் தொலைதூரத்தில் அமைந்தவையும், கடும் சுற்றுச்சூழலைக் கொண்டவையுமாகும். அவுஸ்திரேலியாவில், தண்ணீர் மிகவும் விலைமதிப்புடைய வளமாகும்.

இவ்வளவு பெரிய நாடாக இருக்கும் காரணத்தால், அவுஸ்திரேலியாவின் வெவ்வேறு பகுதிகளில் தட்பவெப்ப நிலை மாறுபடுகிறது. அவுஸ்திரேலியாவின் வடக்காக வெப்பமண்டலப் பகுதிகளும், மத்தியில் பாலைவனங்களும் அமைந்துள்ளன. தெற்கில், வெப்பநிலைகள், மலைகள் பனியால் மூடப்படும் அளவிற்கு குளுமையான குளிர்பருவத்தில் இருந்து, அனல்காற்று வீசும் கோடை வரை மாறக்கூடும்.

ஆறு மாநிலங்கள் மற்றும் இரு பெருநில எல்லைப்பகுதிகள் மட்டுமின்றி, பின்வரும் எல்லைப்பகுதிகளையும் அவுஸ்திரேலியா நிர்வாகித்து வருகிறது.


- ஆஷ்மோர் மற்றும் கார்ட்டியர் தீவுகள்
- கிருத்துமஸ் தீவு
- கோகஸ் (கீலிங்) தீவுகள்
- ஜெர்விஸ் விரிகுடா பகுதி
- கோரல் கடல் தீவுகள்
- அவுஸ்திரேலிய அண்டார்க்டிக் எல்லைப்பகுதியிலுள்ள ஹெர்ட் தீவு மற்றும் மெக்டோனல்டு தீவுகள்
- நோர்ஃபோக் தீவு.

## உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

பின்வரும் அவுஸ்திரேலிய இடங்கள் ஐக்கிய நாட்டு சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (UNESCO) உலகப் பாரம்பரிய அட்டவணையில் இடம்பெற்றுள்ளன.

### கலாச்சாரம் சார்ந்தவை

- அவுஸ்திரேலிய சிறைக்கைதிகள் இடங்கள்
- பட்ஜ் பிம் கலாச்சார நிலப்பகுதி
- மெல்பர்ன் நகரிலுள்ள ரோயல் எக்ஸிபிஷன் கட்டிடம், கார்ல்டன் தோட்டங்கள்
- சிட்னி ஒபெரா ஹவுஸ்.



சிட்னி ஒபெரா ஹவுஸ்

## இயற்கை சார்ந்தவை

- தெற்கு அவுஸ்திரேலியாவிலும், குயின்ஸ்லாந்திலுமுள்ள புதைபடிவ பாலூட்டி காட்சி இடங்கள் (Riversleigh/Naracoorte)
- க்'காரி (முன்பு 'ஃப்ரேசர் தீவு' என்று சொல்லப்பட்டது)
- அவுஸ்திரேலியாவிலுள்ள கோண்டுவானா மழைக்காடுகள்
- கிரேட் பேரியர் ரீஃப்
- பெரும் நீல மலைத்தொடர் பகுதி
- ஹெர்ட் தீவு மற்றும் மெக்டோனால்டு தீவுகள்
- லோர்ட் ஹோவி தீவுக்கூட்டங்கள்
- மெக்குவாரி தீவு
- நிங்காலூ கடற்கரை
- பூர்னுலுலு தேசிய பூங்கா
- சுறா விரிகுடா, மேற்கு அவுஸ்திரேலியா
- குயின்ஸ்லாந்து மாநிலத்திலுள்ள ஈர வெப்ப வலையைப் பகுதிகள்

## கலப்பானவை

- கக்காடு தேசியப் பொங்கா
- தஸ்மேனிய வனப்பகுதிகள்
- Uluru-Kata Tjuta தேசிய வனப்பூங்கா
- Willandra ஏரிகள் பிராந்தியம்.



உலுருகட்டா ஜூட்டா தேசியப் பூங்காவில் அயேர்ஸ் பாறையின் அடித்தளத்தில் அலை வடிவ பாறை அமைவு

மேலே பட்டியலிடப்பட்டுள்ள, மேற்கில் இருக்கிற முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் தேசிய அதிசயங்களுக்குக் கூடுதலாக, நாடெங்கிலும் பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டரெயிட் தீவு வாசிகளுக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆயிரக்கணக்கான புனிதமான இடங்கள் இருக்கின்றன. இவ்விடங்கள், அவுஸ்திரேலியாவின் கலாச்சார கட்டமைவிற்கு முக்கியமானதோர் பகுதியும், அனைத்து புனிதமான இடங்களை வழக்கமாக முன்னோர்களாக இருந்தவர்களின் கதைகளோடும், கலாச்சார மதிப்பையும், நெருங்கிய உறவுகளையும், சமுதாய ஒழுங்கையும் பொதியச் செய்து, இப்பெரும் நிலப்பகுதியை உருவாக்கியதில் அவர்களது பங்கோடும் இணைந்தவையாகும்.

# பரந்துபட்டதொரு தேசம்

பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டரெயிட் தீவு மக்களுக்கு இந்த நிலத்தோடு ஒரு பிரத்தியேக உறவுள்ளது. இவர்கள் எப்போதுமே அயலாகத்தாரோடு தொடர்பு கொள்வதை மதித்து வந்திருக்கிறார்கள் அதோடு மற்றவர்களைச் சந்திக்க வெகுதூரம் பயணிக்கிறார்கள். பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டரெயிட் தீவு வாசிகளின் 'பாடல்-வரிகள்', அவுஸ்திரேலிய எங்கிலுமுள்ள பல்வேறு கலாச்சாரம் மற்றும் பூகோளத்தோடு இணைந்த கலாச்சாரம் ஆகியவற்றை இணைக்கிற கதைகளாகும், அவற்றைப் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பராமரித்துப் பயன்படுத்தி செய்து வருகிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில், மக்களுக்கு பாடசாலைகள், சுகாதாரச் சேவைகள் மற்றும் கடைகளுக்கு சென்றுவருவதற்கான வாய்ப்பு குறைவே, மற்ற அவுஸ்திரேலியர்கள் இதை சாதாரணமாக எடுத்துக்கொள்கிறார்கள். தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் சமுதாயத்தினருக்குத் துணைபுரியும் நாம் இணைத்து பணியாற்றுகிறோம்.குறிப்பிடத்தக்க அவுஸ்திரேலியர்கள், புத்திசாலித்தனத்தினாலும், புதுமையினாலும் இந்த தொலைதூரம் என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண உதவியிருக்கிறார்கள்.



தாஸ்மேனியப் பாலைவனம்



## மிதிவிசை வானொலி

கால்மிதி விசையால் மின்சக்தி பெற்று இயங்கும் வானொலியை முதல்முறையாக அடிலெய்டு நகரைச் சேர்ந்த ஆல்ஃப்ரட் டிரேகர் என்பவர் 1929-ஆம் ஆண்டு வடிவமைத்தார். தமது பாதங்களால் விசைகளை அழுத்துவதன் மூலம் பாவனையாளர்கள் இருவழி வானொலித் தொடர்பை மேற்கொள்ள இயலுமாயிருந்தது. தொலைதூரங்களில் இருந்த பண்ணை வீடுகள், தொலைதூர சமயப்பரப்பு மையங்கள் மற்றும் பூர்வீகக்குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளது சமூகங்கள் அனைத்தும் இக்கண்டுபிடிப்பின் மூலம் பயனடைந்தன. 'ரோயல் விமான மருத்துவர் சேவை' (Royal Flying Doctor Service) மற்றும் 'வானொலிப் பள்ளி' (School of the Air) என்ற இரு புகழ்பெற்ற அவுஸ்திரேலிய நிறுவனங்கள் உருவாக இந்த மிதிவிசை வானொலி காரணமாயிருந்தது.

## ரோயல் விமான மருத்துவர் சேவை

போதகர் ஜான் ஃப்ளையின் என்பர் தொலைதூரச் சமூகங்களுடன் வாழ்ந்து மக்களுக்குச் சேவை புரிந்து வந்தார். உள்ளகப் பகுதியில் உள்ள நோயாளர்களிடம் விமானம் மூலம் மருத்துவரைக் கூடிய விரைவில் கொண்டுவர வேண்டும் என்பது இவரது கருத்தாகும். அரசாங்கத்திடமிருந்தும், குவாண்டாஸ் விமான நிறுவனத்திடமிருந்தும், சில தரும ஸ்தாபனங்களிடமிருந்தும் இவருக்கு உதவி கிடைத்தது. 1928-ஆம் ஆண்டு 'ரோயல் விமான மருத்துவ சேவை' துவக்கப்பட்டது, ஆனாலும் இச்சேவையைப் பெற இயலாதோர் தொலை தூரப் பகுதிகளில் இன்னும் இருந்தனர். மிதிவிசை வானொலி அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக மிகவும் ஒதுக்குப் புறங்களிலிருந்த மக்களால் மருத்துவரைக் கூடிய விரைவில் அழைப்பது சாத்தியமானது.

## வானொலிப் பள்ளி

1950கள் வரையிலும், ஒதுக்குப் புறங்களில் வாழ்ந்துவந்த குழந்தைகள் தங்கிப் பயிலும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது, அல்லது அஞ்சல் மூலம் தமது பாடங்களை பூரணப்படுத்த வேண்டியிருந்தது. தென் அவுஸ்திரேலிய மாநில ரோயல் விமான மருத்துவ சேவையின் உப-தலைவர் அடிலெய்ட் மியத்கே என்பவர், விமான மருத்துவ சேவைக்காகப் பயன்படுத்தப்படும் வானொலியின் மூலம் வீட்டிலிருக்கும் குழந்தைகள் தமது ஆசிரியர்களுடன் பேசலாம் என்பதை உணர்ந்தார். அலைஸ் ஸ்பிரிங்ஸ் சேவையானது 1948-ஆம் ஆண்டில் இந்த இருவழி வானொலிப் பாடங்களை ஆரம்பித்தது. இதையடுத்து சில ஆண்டுகளுக்குப் பிறகு சம்பிரதாயப்படியான வானொலிப் பள்ளி ஸ்தாபிக்கப்பட்டது. இன்னும் இதர பல நாடுகளிலும் இது போன்ற பாடத் திட்டங்கள் உருவாக அவுஸ்திரேலியாவின் வானொலிப் பள்ளி உதவியிருக்கிறது.

தற்காலத்தில், உயர் அலைவரிசைகளைப் பயன்படுத்தும் நவீன வானொலிச் சாதனங்கள் பழைய மிதிவிசை வானொலிகளை பிரதியீடு செய்துள்ளன, இப்போது அதற்குப் பதிலாக இணையம் வந்துள்ளது. அவுஸ்திரேலிய ரோயல் விமான மருத்துவ சேவையும், வானொலிப் பள்ளியும் அவுஸ்திரேலியத் தொலைதூர சமூகத்தினருக்கு இன்றும் சேவை புரிந்து வருகின்றன.

# அவுஸ்திரேலியாவின் தேசிய அடையாளம்

அவுஸ்திரேலியாவின் அடையாளம் அனேகக் காரணிகளால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது, அதில் நமது தனித்துவப் பாரம்பரியம், கலாச்சாரம், நமது பிரித்தானிய அடித்தளங்கள், மக்களிடையே காணும் வேற்றுமை, நமது வரலாறு, அன்றாட வாழ்வை வழிநடத்தும் மதிப்புகள், நமது வாழ்க்கை முறைகள் மற்றும் நாம் இரசிக்கும் அவுஸ்திரேலியர்கள் ஆகியவை அடங்குகின்றன.

*பகுதி 6 – நமது அவுஸ்திரேலிய வரலாறு* நமது வரலாற்றைப் பார்வையிடுகிறது இது, அவுஸ்திரேலியாவின் குடியேற்றக் கடந்த காலம் மற்றும் பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளின் சமீபத்திய மற்றும் தற்கால சூழல்கள் தொடர்பான விடயங்களைச் சிறப்பம்சப்படுத்திக் காண்பிக்கிறது. இந்த வரலாற்றில், அவுஸ்திரேலியாவின் வேற்றுமையான, பல்கலாச்சார சமுதாயம், மற்றும் ஒரு தேசமாக நாம் எதிர்நோக்கியிருக்கிற போர்கள் போன்ற சவால்கள் ஆகியவையும் அடங்குகின்றன.

இந்த அத்தியாயத்தின் மீதப்பகுதி, நாம் பின்பற்றுகிற சில வாழ்க்கை முறைகள் மற்றும் நாம் இரசிக்கிறவர்கள் ஆகியவற்றில் பார்வையைச் செலுத்துகிறது.

## விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு

அவுஸ்திரேலியர் பலர் விளையாட்டின் மீது பெரு விருப்பு கொண்டவர்களாவர், பலர் சர்வதேச அளவில் உன்னதமான சாதனைகள் படைத்துள்ளனர்.

விளையாட்டு, நமது வரலாறு நெடுகிலும், அவுஸ்திரேலிய மக்களது அடையாளமாகவும், நம்மனைவரையும் ஒன்றுபடுத்தக்கூடியதாகவும் இருந்து வருகிறது. குடியேற்றத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே, கடினமானதொரு வாழ்க்கையின் யதார்த்தங்களிலிருந்து விடுபட உதவும் ஒரு வடிகாலாக விளையாட்டு இருந்து வந்துள்ளது. யுத்தகாலத்திலும் கூட, போர்க்களத்தின் தாக்கத்திலிருந்து சிறுது நிவாரணம் பெற அவுஸ்திரேலியப் பாதுகாப்புப்படை வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அவற்றில் கலந்து கொண்டனர்.

விளையாட்டு வீரர்கள், பார்வையாளர்கள் ஆகிய இருபகுதியினருமே தாம் சமூகத்தின் ஓர் அங்கம் என்பதற்கு விளையாட்டு பொதுக்களம் அமைத்துக் கொடுப்பதுடன் அது அவுஸ்திரேலிய சமூகத்தின் முக்கிய ஓரம்சமாக விளங்குகிறது. பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகள் மற்றும் புலம்பெயர்ந்த அவுஸ்திரேலியர்கள், நாட்டின் மிக வெற்றிகரமான விளையாட்டு வீரர்களாவர்.

அணிகளாய்ப் பிரிந்து விளையாடும் கிரிக்கட், கூடைப்பந்து, வலைப்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டுகளில் அனேக அவுஸ்திரேலியர்கள் பங்கு பெறுகின்றனர். அவுஸ்திரேலியாவில் விளையாடவும், கண்டுகளிக்கவும் மிகவும் பிரபலமான விளையாட்டுப்போட்டிகள், சாக்கர் கால்பந்து விதிகள், ரக்பி லீக், ரக்பி யூனியன் மற்றும் தனித்துவமாக அவுஸ்திரேலிய விளையாட்டான அவுஸ்திரேலிய விதிகளைக் கொண்ட கால்பந்து ('ஆஸ்ஸி ரூல்ஸ்') ஆகியவையாகும். நீச்சல், டென்னிஸ், களவிளையாட்டுகள், கோல்ஃப் மற்றும் சைக்கிள் மிதித்தல் போன்றவை பிரபல பொழுதுபோக்கு நடவடிக்கைகளாகும்.

குறிப்பாக, கிரிக்கட் ஆட்டத்தில் பன்னாட்டு அளவில் தான் பெற்றுள்ள வெற்றிகள் குறித்து அவுஸ்திரேலியா பெருமை கொள்கிறது. 19-ஆம் நூற்றாடின் இறுதிய்லிருந்தே அவுஸ்திரேலிய, இங்கிலாந்து கிரிக்கட் அணிகளுக்கிடையே கடும் போட்டி மனப்பான்மை இருந்து வருகிறது.

'தேசத்தையே ஸ்தம்பிக்க வைக்கும் பந்தயம்' எனப்படும் 'மெல்பர்ன் கிண்ணம்' உலகின் மிகச்செல்வந்த மற்றும் போட்டித்தன்மை மிக்க குதிரைப் பந்தயங்களில் ஒன்றாகும். முதலாம் மெல்பர்ன் கிண்ணப் போட்டி 1877- ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அந்த நாளிலிருந்தே, நவம்பர் மாதத்தில் வரும் முதல் செவ்வாயன்று நடைபெறும் 'மெல்பர்ன் கிண்ண தினம்' விக்டோரிய மாநிலத்தில் பொதுவிடுமுறை நாளாகும்.

### Sir Donald Bradman (1908–2001)



சர் டோனால்ட் பிராட்மனைப் போல சிறந்த மட்டைப்பந்து வீரர் எவரும் இதுவரை இருந்ததில்லை - இவர் வரலாற்றில் இடம் பிடித்துவிட்ட அவுஸ்திரேலிய விளையாட்டு வீரராவார். நியு+ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் Bowral எனும் இடத்தில் வளர்ந்த பிராட்மன் அவுஸ்திரேலிய அணிக்காக தனது முதல் கிரிகட் ஆட்டத்தை 1928-ல் விளையாடினார்.

அவர் கால்களில் வியப்படைய வைக்கும் அதிவேகம் கொண்டவர். 1930-ல் அவர் மேற்கொண்ட முதல் இங்கிலாந்துச் சுற்றின்போது கிட்டத்தட்ட அனைத்து மட்டையடி சாதனைகளையும் இவர் முறியடித்தார். 21 வயதானபோது, இவர் ஏற்கனவே வரலாற்று நாயகனாகியிருந்தார். 1948-ல், பிராட்மனின் இறுதி இங்கிலாந்துச் சுற்றின்போது, இங்கிலாந்தை எதிர்த்து விளையாடிய எந்தவொரு ஆட்டத்திலும் அவர்கள் தோல்வியடையாததால் அவரது அணியினர் 'தோற்கடிக்கப்படவியலாதோர்' 'The Invincibles' என அழைக்கப்பட்டனர்.

## கலைகள்

தேசத்தின் பூர்வீகக்குடிகளது கலாசாரப் பாரம்பரியங்களையும், பல்வேறுபட்ட புலம்பெயர்ந்தோரது சிறப்பான கலாசாரங்களையும் உள்ளடக்கும் காத்திரம் வாய்ந்த கலைக் காட்சிகள் அவுஸ்திரேலியாவில் உண்டு. திரைப்படம், கலை, அரங்க நிகழ்ச்சிகள், இசை மற்றும் நடனம் உட்பட அவுஸ்திரேலிய நாட்டின் அனைத்துவித காட்சி மற்றும் நடனக் கலைகள், இங்கும் கடல்தாண்டிய நாடுகளிலும் போற்றப்படுகின்றன.

### இலக்கியம்

அவுஸ்திரேலியாவிற்கு இலக்கியத்தில் ஒரு வலுவான பாரம்பரியம் உள்ளது. இது, பூர்வீகக்குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவுவாசிகள் கதை சொல்வதில் ஆரம்பித்து, 18 ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் வந்து சேர்ந்த சிறைக்கைதிகளின் வாய்வழிக் கதைகளாகத் தொடர்ந்தது.

அவுஸ்திரேலியாவின் ஆரம்பகால எழுத்துக்கள் பெரும்பாலும், முட்புதர்கள் மற்றும் இதுபோன்ற கடும் சூழலில் வாழ்வின் சிரமங்கள் குறித்தவையாகவே இருந்தன. அவுஸ்திரேலியாவின் முட்புதர்கள் மற்றும் அவுஸ்திரேலிய வாழ்க்கைமுறைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஹென்றி லாவ்சன் மற்றும் மைல்ஸ் ஃப்ராங்ளின் ஆகியோர் கதைகளையும் கவிதைகளையும் எழுதினர்.

அவுஸ்திரேலியப் புதின எழுத்தாளரான Patrick White 1973-ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். Peter Carey, Colleen McCullough, Sally Morgan, Tim Winton, Tom Keneally மற்றும் Bryce Courtenay ஆகியவர்கள் இதர பிரபல புதினப் படைப்பாளர்களில் அடங்குவர்.

### Judith Wright (1915–2000)

ஜூடித் ரைட் ஒரு மிகச் சிறந்த கவியும், இயற்கைச்சூழல் பாதுகாப்பாளரும், அபொரிஜினிப் பூர்வீகக்குடியினரது உரிமைகளுக்காகப் போராடியவரும் ஆவார். இவர் தனது கவிதைகளில் அவுஸ்திரேலிய நாட்டின் மீதும் அவுஸ்திரேலிய மக்கள் மீதும் தான் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினை வெளிப்படுத்தினார். இலக்கியத்திற்கான என்சைக்ளோபீடியிஆ பிரிட்டானிகா பரிசு மற்றும் கவியியலுக்கான அரசியரது தங்கப்பதக்கம் உட்பட பல பரிசுகளை இவர் பெற்றார். இவர் 'அவுஸ்திரேலிய சுற்றுச்சூழல் காப்புக் குழு' மற்றும் 'அபொரிஜினிப் பூர்வீகக்குடிகள் ஒப்பந்தக் குழு' ஆகியவற்றின் அங்கத்தினராக இருந்தார்.

அவரது கவித் திறமைக்காகவும், அவுஸ்திரேலிய இலக்கியத்தின் முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய பணிக்காகவும், அவரது சமுதாய, சுற்றுச்சூழல் சீர்திருத்தத்திற்காகவும் அவர் நினைவு கூரப்படுகிறார்.



### நாடக அரங்கு மற்றும் திரைப்படம்

அவுஸ்திரேலிய நாடகங்களும், திரைப்படங்களும், திரைப்படத் தயாரிப்பாளர்களும் இங்கும் வெளிநாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகின்றனர். திரைப்படத் துறையில் தாம் படைத்துள்ள சாதனைகளுக்கென, Cate Blanchett, Geoffrey Rush, Nicole Kidman மற்றும் Hugh Jackman போன்ற நடிகர்களும், Peter Weir மற்றும் Baz Luhrmann போன்ற திரைப்படத் தயாரிப்பாளர்களும் பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளனர்.

### கலை

தேசியச் சின்னமாய் விளங்கும் பூர்வீகக்குடியினரது ஓவியங்களும், Tom Roberts, Frederick McCubbin மற்றும் Arthur Streeton போன்ற ஓவியர்களால் 19-ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட புதர்க்காட்டுப்புறக் காட்சிகளும் மிகவும் பிரசித்தி பெற்ற அவுஸ்திரேலியக் கலை வேலைப்பாடுகளாகும். 20-ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் Russell Drysdale மற்றும் Sidney Nolan ஆகிய ஓவியர்கள் தொலைதூரப் புதர்ப்பிரதேசங்களின் வரண்ட கடுமையைப் பளீரிடும் வண்ணங்களில் சித்திரமாய்க் காட்டினர். தனது தனித்துவத்தையும், தெள்ளத்தெளிவான பாணியையும் முன்னிட்டு Brett Whiteley சமீப காலத்தில் உலகநாடுகளின் பாராட்டைப் பெற்றார். Albert Namatjira, Emily Kame Kngwarreye, Gloria Petyarre, Rover Thomas மற்றும் Clifford Possum Tjapaltjarri, ஆகியோரது உள்நாட்டுக் கலை, வரவர அவுஸ்திரேலியாவிலும், அயல்நாடுகளிலும் அதிகமதிகமாக விரும்பப்படுகின்றன.

### இசை மற்றும் நடனம்

பண்டைய உள்நாட்டு இசைக்கருவியான டிட்ஜெரிடூ எனபதன் ஒலி உடனே அடையாளம் காணப்படக்கூடிய அவுஸ்திரேலியாவுக்கே உரித்தான ஒலியாம்.

பாரம்மரிய இசை, நாட்டுப்புற இசை, ராக் இசை ஆகியவற்றிற்குத் தாம் ஆற்றியுள்ள பங்கிற்காகவும் அவுஸ்திரேலியர்கள் சர்வதேச அளவில் புகழ்பெற்றுள்ளனர்.

மிகவும்-அங்கீகாரம் பெற்ற அவுஸ்திரேலிய இசைக் கலைஞர்களில், Kylie Minogue, Jimmy Barnes, Paul Kelly, Olivia Newton-John, John Farnham, Nick Cave, மற்றும் உள்நாட்டு கலைஞர்கள் Archie Roach, Gurrumul மற்றும் Jessica Mauboy ஆகியோர் அடங்குவர் அவுஸ்திரேலிய பேண்டுகளான, AC/DC மற்றும் INXS ஆகியவை உலகெங்கிலும் இரசிகர்களைப் பெற்றன.

அவுஸ்திரேலிய நடனம் பெரும் நடனக் கலைஞர்களின் முயற்சிகள் மற்றும், Sir Robert Helpmann, Meryl Tankard, Stephen Page மற்றும் Li Cunxin போன்ற ஒப்பனைக் கலைஞர்களது முயறகளினாலும் செழித்தோங்கியது. பங்கர்ரா என்பது பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளின் நடன நிறுவனமாகும், இது இதன் தனித்துவமான நடனம், ஒலியமைப்பு, இசை மற்றும் வடிவத்திற்கு, தேசமெங்கிலும், உலகெங்கிலும் பரவலாக பாராட்டுப் பெற்றதாகும்.

## விஞ்ஞான சாதனைகளும் கண்டுபிடிப்புகளும்

விஞ்ஞானத் துறையிலும், மருத்துவம், தொழில்நுட்பம், விவசாயம், சுரங்கத்தொழில், உற்பத்தி ஆகிய துறைகளிலும் அவுஸ்திரேலியர்கள் பெரும் சாதனைகள் பல புரிந்துள்ளனர்.

விஞ்ஞான மற்றும் மருத்துவக் கண்டுபிடிப்புகளுக்கென அனேக அவுஸ்திரேலியர்கள் நோபல் பரிசு பெற்றுள்ளார்கள்.

விஞ்ஞானத் துறையில் சாதனை படைத்த அவுஸ்திரேலியர்கள் ‘ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர்’ விருதுகளையும் பெற்றுள்ளனர். தீக்காயங்களால் பாதிக்கப்பட்டோரின் தோலின் மீது தெளிப்பதற்கான மருந்து ஒன்றைக் கண்டுபிடித்ததற்காக 2005 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் Fiona Wood பெற்றார். கர்ப்பப்பை புற்றிற்கான ஊசிமருந்தைக் கண்டுபிடித்த பேராசிரியர் Ian Frazer 2006-ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற்றார். சுற்றுச்சூழல் அறிவியலில் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவரான பேராசிரியர் Tim Flannery இவ்விருதினை 2007-ல் பெற்றார்.

பேராசிரியர் Wood மற்றும் பேராசிரியர் Frazer இருவரும் பிரிட்டனிலிருந்து அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்தவர்களாவர். சீனாவிலிருந்து அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து, பின்னர் அவுஸ்திரேலியப் பிரசையான காலஞ்சென்ற டாக்டர் Jian Zhou என்பவர் பேராசிரியர் Frazer உடன் இணைந்து பணியாற்றிய துணைக் கண்டுபிடிப்பாளராவார்.

### டாக்டர். ஃபியானா வுட் AM (பிறப்பு 1958)

டாக்டர் ஃபியானா வுட் அவர்கள், அவுஸ்திரேலியாவில் புதுமைகளைப் புகுத்திய, மிகவும் மதிப்பிற்குரிய அறுவைச் சிகிச்சை நிபுணரும், ஆராய்ச்சியாளர்களில் ஒருவருமாவார். இவர் மிகத் திறமை வாய்ந்த ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை மற்றும் மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சை நிபுணராவார் அதோடு இவர் உலகின் முன்னணி தீப்புண் சிகிச்சை சிறப்பு நிபுணராவார், இவர் தீப்புண்கள் மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னோடியாகத் திகழ்பவராவார்.

2002 ஆம் ஆண்டில் பாலி குண்டுவெடிப்புகளில் பாதிக்கப்பட்டவர்களோடு இவர் பணியாற்றியதைத் தொடர்ந்து, டாக்டர் பாலி அவர்களை 2003 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலியாவின் ‘மெம்பர் ஆஃப் தி ஆர்டர்’ என்ற உயரிய விட்து கொடுத்து கவுரவித்தார்கள்.

2005 ஆம் ஆண்டில் அவரை மிகச் சிறந்த அவுஸ்திரேலியர் என்று சொன்ன போது, மிகச்தீப்புண் சிகிச்சையில் அவரளித்த பங்களிப்பை அங்கீகரித்தார்கள்.



### பேராசிரியர் Fred Hollows (1929–1993)

அவுஸ்திரேலியாவிலும், முன்னேறிவரும் மற்ற நாடுகளிலும் பத்து இலட்சத்திற்கும் மேலான மக்களுக்குக் கண் பார்வை திரும்பக் கிடைக்க உதவிய மனிதநேயம் மிக்க கண்மருத்துவர் பேராசிரியர் ஃபிரட் ஹாலோஸ். ஃபிரட் ஹாலோஸ் நியு+சிலாந்தில் பிறந்தார். 1965-ல் அவுஸ்திரேலியாவிற்குக் குடிபெயர்ந்த இவர், பின்னர் சிட்னி மருத்துவமனை ஒன்றில் கண்மருத்துவத்துறையின் தலைமை மருத்துவரானார்.

அனைவரும் சமமே என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த இவர் முதன்முதலாக அபோரிஜினிப் பூர்வீகக்குடியினருக்கான மருத்துவ சேவையை அமைக்க உதவினார். தற்பொழுது அவுஸ்திரேலியா நெடுக இதுபோன்ற அனேக சேவைகள் உள்ளன.

1980-ஆம் ஆண்டின் துவக்கத்தின்போது, வளர்ந்துவரும் நாடுகளில் கண்மருத்துவத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கென இவர் உலகமெங்கும் பயணம் செய்துகொண்டிருந்தார். 1989-ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் இவர் அவுஸ்திரேலியப் பிரசையானார்.

The Fred Hollows Foundation மூலமாக பேராசிரியர் ஹாலோஸ் அவர்களது சேவை தொடர்கிறது.



# ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர்கள்

1960-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து, முன்னணி அவுஸ்திரேலியர்களது சாதனைகளும் பங்களிப்புகளும் 'ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர்' விருதுகள் மூலம் பாராட்டப்படுகின்றன. எத்துறையைச் சார்ந்த எந்த ஒரு அவுஸ்திரேலியரையும், யாரும் இவ்விருதிற்கென முன்மொழியலாம்.

தனது பணியில் சிறந்து விளங்கி நாட்டிற்குத் தொண்டாற்றியுள்ளவர்களே 'ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர்களாவர். அவர்கள், நம் மனதைக் கவர்ந்து, இன்னும் சிறப்பான அவுஸ்திரேலியாவை உருவாக்குவதில் நமது சொந்தப் பங்கினை அளிக்க நமக்கு சவால் விடுக்கிறார்கள்.

விருதுகளில், ஆண்டின் இளம் அவுஸ்திரேலியர் விருது, ஆண்டின் மூத்த அவுஸ்திரேலியர் விருது, அவுஸ்திரேலியாவின் உள்நாட்டுக் கதாநாயகன் ஆகியவை அடங்குகின்றன.

தற்போதைய மற்றும் முன்னாள் விருது பெற்றோர்களது பட்டியல் இந்த இணையதளத்தில் கிடைக்கிறது
www.australianoftheyear.org.au.

## Dr James Muecke AM



**கண் மருத்துவர் மற்றும் பார்வையிழப்புத் தடுப்பு முன்னோடி, 2020 ஆண்டின் தலைசிறந்த அவுஸ்திரேலியர்**

Dr Muecke அவர்கள் தான் அனைவருக்கும் பார்வை என்ற, தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை சேர்ந்து நிறுவியவராவார், இத்தொண்டு நிறுவனம், ஆராய்ச்சி, கல்வி, உள்கட்டமைப்பு மற்றும் கூட்டு நாடுகளில் இருக்கிற உடன் பணியாற்றுவோர்களுக்கான பயிற்சி ஆகியவற்றின் வாயிலாகப் பார்வையிழப்பைக் குறைக்க குறிக்கோள் வைத்துள்ளது.

Dr Muecke அவர்கள் பார்வையிழப்பு என்பது ஒரு மனித உரிமைப் பிரச்சினை என்றே நம்புகிறார், அதோடு அவர் அனைவரும் பார்க்க முடிகிறதோர் உலகை உருவாக்குவதற்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்.

## பேராசிரியர் மைக்கேல் சிம்மன்ஸ் (பிறப்பு 1967)



**இவர் குவாண்டம் இயற்பியலில் பேராசிரியராவார் 2018 ஆம் ஆண்டின் சிறந்த ஆஸ்திரேலியப்**

பேராசிரியர் விருதுபெற்ற சிம்மன்ஸ் அவர்கள், அணுக்கரு மின்னணுவியல் மற்றும் குவாண்டம் கணினி இயக்கத்தில் ஒரு முன்னோடி ஆவார். "கணினி காலத்தின் இடப் பந்தையம்" என்று இவர் சொல்லும் ஒன்றின் முன்னிலையில், பேராசிரியர் சிம்மன்ஸ் அவர்கள், தீர்க்க ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகும் பிரச்சினைகளை நிமிட நேரங்களில் தீர்க்க ஒரு குவாண்டம் கணினியை உருவாக்கும் குறிக்கோளைக் கொண்டுள்ளார்.

அது போன்றதோர் கண்டுபிடிப்பிற்கு, மருந்து வடிவமைப்பு, வானிலை முன்னறிவிப்பு, சுயமாக ஓடும் வாகனங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இன்னும் பலவற்றில் புரட்சி ஏற்படுத்தும் ஆற்றல் உள்ளது.

2018 ஆம் ஆண்டில், பேராசிரியர் சிம்மன்ஸ் அவர்களுக்கு, குவாண்டம் தகவல் அறிவியலில் அவர் ஆற்றிய பணிக்காகவும், அர்ப்பணிப்பிற்காகவும், ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர் என்று விருதளித்தார்கள்.

2019 ஆம் ஆண்டில், குவாண்டம் மற்றும் அணுக்கரு மின்னணுவியலில் ஒரு தலைவராக, அறிவியல் கல்விக்கு தன்னிகரற்ற சேவையளித்ததையும், ஒரு முன் மாதிரியாக விளங்கியதையும் அங்கீகரிக்கும் விதமாக, 'ஆர்டர் ஆஃப் அவுஸ்திரேலியாவில்' ஒரு அலுவலராக நியமனம் பெற்றார்.

# அவுஸ்திரேலியப் பண நோட்டுகள் மற்றும் நாணயங்கள்

அவுஸ்திரேலியாவுக்கு முக்கியமானவர்களையும், அவுஸ்திரேலியவின் அடையாளமான சின்னங்களையும் நமது பண நோட்டுகளும், நாணயங்களும் சித்தரிகின்றன.

சமூக சீர்த்திருத்தம், விஞ்ஞானம், அரசியல், இராணுவ சாதனைகள் மற்றும் கலைகள் ஆகிய துறைகளின் ஆரம்ப கர்த்தாக்களான புகழும் புலமையும் பெற்ற அவுஸ்திரேலியர்கள் நமது நாணயங்களில் தோன்றுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இராணியார் இரண்டாம் எலிசபெத் (1926–2022)

இராணியார் இரண்டாம் எலிசபெத் அவர்கள் ஆஸ்திரேலிய அரசின் தலைவராக இருந்தார். அவர் ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் இராணியாராக இருந்தார். அவரது நீண்ட, மற்றும் புகழ் மிக்க ஆட்சி முழுவதும் அவர் ஒரு வலுவான நிலையில் முன்னிலை வாய்ந்தவராக அவர் திகழ்ந்தார்.




## பாராளுமன்ற அரங்கமும், முற்ற அமைப்பும்

பாராளுமன்ற அரங்கின் முறைப்படியான கட்டிடத் திட்டம், பாராளுமன்ற அரங்கக் கட்டுமான ஆணையம் வழங்கிய 'டிசைன் டெவலப்மெண்ட் லேண்ட்ஸ்கேப் பிளான்' அடிப்படையிலானதாகும். முற்ற அமைப்பு 'போஸ்ஸம் அண்டு வல்லாபி டிரீமிங்' என்று தலைப்பிட்டு மைக்கேல் நெல்சன் ஜகமரா வரைந்த 'செண்ட்ரல் டெசர்ட் டாட்-ஸ்டைல்' அடிப்படையிலானதாகும்.




## Dame Mary Gilmore (1865–1962)

Dame Mary Gilmore ஒரு எழுத்தாளர், செய்தியாளர், கவிஞர் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதி ஆவார். அவரது எழுத்துக்காவும், பெண்கள், பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்கள் மற்றும் ஏழை எளியோருக்காக அவர் எழுப்பிய குரலுக்காகவும் அவர் நினைவுகூறப்படுகிறார்.




## AB 'Banjo' Paterson (1864–1941)

AB 'Banjo' Paterson ஒரு கவிஞரும், பாடல் எழுத்தாளரும், செய்தியாலருமாவார். 'பேஞ்ஜோ' பேடர்சன் எனும் பெயரில் எழுதி வந்த அவர் 'வால்ட்ஸிங் மெட்டில்டா' எனும் புகழ்பெற்ற அவுஸ்திரேலிய பழங்கதைப் பாடலை இயற்றியதற்காக நினைவுகூரப்படுகிறார்.




## Reverend John Flynn (1880–1951)

Reverend John Flynn மருத்துவ சேவை' என அழைக்கப்படும் உலகிலேயே முதலாவதான விண்ணூர்தி மூலமான மருத்துவ சேவையை ரெவரண்ட் ஜான் ஃபிளின் துவங்கினார். அவுஸ்திரேலியாவின் தொலைதூரப் பகுதிகளுக்கு மருத்துவ சேவையைக் கொண்டுவந்ததன் மூலம் பல உயிர்களைக் காத்தமைக்க அவர் மக்களது நினைவில் நிற்கிறார்.



## Mary Reibey (1777–1855)

Mary Reibey நியூ சவுத் வேல்ஸ் குடியேற்றத்தின் முன்னோடி வர்த்தகப் பெண்மணியாவார். இளம்பிராயத்திய தண்டனைக்கைதியாக அவுஸ்திரேலியாவுக்கு வந்த இவர் சமூகத்தினரிடையே மதிப்பு வாய்ந்ததோர் முக்கியமான நபராக வளர்ந்தார்.




## Edith Cowan (1861–1932)

Edith Cowan ஓர் சமூக சேவகர், அரசியல்வாதி மற்றும் மகளிர் உரிமைப் போராளி. அவுஸ்திரேலியப் பாராளுமன்றம் ஒன்றிற்கு முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி இவரே.




## David Unaipon (1872–1967)

David Unaipon ஒரு எழுத்தாளரும், பொதுப் பேச்சாளரும், கண்டுபிடிப்பாளரும் ஆவார். விஞ்ஞானம் மற்றும் இலக்கியத்திற்குத் தான் அளித்த சேவைக்காகவும், அபொரிஜினி மக்களது வாழ்க்கை நிலைகளை மேம்படுத்த தான் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் இவர் பெயர் பெற்றுள்ளார்.




## Sir John Monash (1865–1931)

Sir John Monash ஒரு பொறியாளர், நிர்வாகி மற்றும் அவுஸ்திரேலியாவின் சிறந்த இராணுவ அதிகாரிகளில் ஒருவர். வழிநடத்துத் திறன், அறிவுக்கூர்மை மற்றும் பேச்சுத்திறனுக்கு இவர் பெயர் பெற்றவர்.




## Dame Nellie Melba (1861–1931)

Dame Nellie Melba உலகப் புகழ் பெற்ற உச்சக்குரல் பாடகராவார். 'பாடல் அரசி' என உலகெங்கும் அழைக்கப்படுபவர், இவர் பன்னாட்டு அளவில் புகழீட்டிய முதல் அவுஸ்திரேலியப் பாடகர்.



# தேசிய தினங்கள் மற்றும் கொண்டாட்டங்கள்

அவுஸ்திரேலியாவின் தேசிய விடுமுறைகள் ஐரோப்பியக் குடியேற்றத்திற்குப் பிறகு அவுஸ்திரேலிய அடையாளம் ஒன்றினை உருவாக வழியமைத்த தலையாய நிகழ்ச்சிகளையும் பிரதிபலிக்கின்றன.

## நிலையான தினங்கள்

- **புத்தாண்டு தினம் சனவரி 1 ஆம் திகதி** புத்தாண்டின் ஆரம்பத்தை நாம் கொண்டாடுகிறோம்.
- **அவுஸ்திரேலிய தினம் சனவரி 26 ஆம் திகதி** ஓர் அவுஸ்திரேலியன் என்றால் என்ன பொருள் என்பது குறித்து பெருமிதம் கொள்ளும் நாம் 1788-ஆம் ஆண்டு சிட்னி வளைகுடாவில் 'முதலாம் கப்பல் தொகுதி' வந்திறங்கிய நாளை நினைவுகூர்கிறோம். இந்தத் தேதி, 1788 ஆம் ஆண்டில், கிரேட் பிரிட்டனில் இருந்து, முதல் கப்பற்படை சிட்னி கோவ்-இல் வந்து சேர்ந்த நாளாகும்.
- **ஆன்ஸக் தினம் ஏப்ரல் 25** இது முதல் உலக மகாயுத்தத்தின் போது அவுஸ்திரேலிய மற்றும் நியூஸிலாந்து இராணுவத் துருப்புகள் (Australian and New Zealand Army Corps (ANZAC)) கலிபொலியில் தரையிறங்கியதை நினைவுகூருகிறோம். யுத்தங்களில் பணியாற்றிய, உயிர்நீத்த சகல அவுஸ்திரேலியர்களையும் நாம் கௌரவிக்கிறோம். அனைத்து இராணுவ வீரர்கள் மற்றும் வீராங்கனைகளது தைரியத்தையும், நாடுப்பட்டரையும் நாம் மரியாதை மதிப்புடன் நினைவு கூர்கிறோம்.
- **கிரித்துமஸ் தினம் டிசம்பர் 25** இது, ஒருவருக்கொருவர் அன்பளிப்புகள் கொடுத்து ஏசு கிருஸ்து பிறந்த தினத்தை கிருத்துவர்கள் கொண்டாடும் தினம்.
- **பாக்சிங் தினம் டிசம்பர் 26** இது, கிரித்துமஸ் பண்டிகைக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதி.

## மாறிவரும் விழாத் திகதிகள்

- **தொழிலாளர் தினம் அல்லது 'எட்டு மணித்தியான தினம்' எட்டு மணி நேரம் மட்டுமே பணியாற்றும் உறிமையை உலகில் முதல் முறையாக அவுஸ்திரேலியத தொழிலாளர்கள் வென்றதைக் கொண்டாடும் தினம்.**
- **ஈஸ்டர்** ஏசு கிருத்து மரித்ததையும், உயிர்த்தெழுந்ததையும் சொல்லும் கிருத்துவக் கதையினை நினைவுகூரும் தினம்.
- ஆஸ்திரேலிய அரசரான அரசர் மூன்றாம் சார்லஸ் அவர்களது பிறப்பினை '**அரசரது பிறந்த தினம்' (King's Birthday)** கொண்டாடும் நாள். மேற்கு ஆஸ்திரேலிய மாநிலத்தைத் தவிர்த்த ஒவ்வொரு மாநிலத்திலும் எல்லைப்பகுதியிலும் ஜூன் மாதத்தின் இரண்டாம் திங்கட்கிழமை இத்தினம் கொண்டாடப்படுகிறது.

## இதர பொது விடுமுறை நாட்களள

வெவ்வேறு மாநிலங்கள், எல்லைப்பகுதிகள் மற்றும் நகரங்களில் இத பொது விடுமுறை நாட்கள் உண்டு. உதரணாமாக அவுஸ்திரேலியத் தலைநகர எல்லைப்பகுதியில் 'கேன்பரா தின'மும், தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் 'சுய விருப்புத்தொண்டர் தின'மும்;, மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் 'தோற்றுவிப்புத் தின'மும்., கொண்டாடப்படுகின்றன.

## மற்ற முக்கிய தினங்கள் (பொது விடுமுறை நாட்கள் அல்ல)

- **இணக்க வாரத்தை, இணக்க வாரத்தை,** 21 மார்ச் தேதி உள்ளிட்ட வாரத்தில் கடைபிடிக்கிறோம், அதோடு இது நமது காலாச்சார வேற்றுமையைக் கொண்டாடுவதாகும்21 மார்ச் தேதி உள்ளிட்ட வாரத்தில் கடைபிடிக்கிறோம், அதோடு இது நமது கலாச்சார வேற்றுமையைக் கொண்டாடுவதாகும்.
- **அவுஸ்திரேலிய குடிமக்கள் தினம், 17 செப்டம்பர் அன்று,** அவுஸ்திரேலியக் குடியுரிமையால் நாம் பிரதிபலிக்கிற பொதுவான பிணைப்பைக் கொண்டாடுகிறோம், அதோடு இது நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நாம் ஆற்றும் பங்கினைப் பிரதிபலிக்கிறது.
- **தேசிய ஒப்புரவாகுக்தல் வாரம் - 27 மே முதல் 3 ஜூன் வரை** இது இன்னும் ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதையில் மிகச் சிறந்தவர்களாகத் திகழ்வதன் மூலம், இன்னும் அதிகமான நீதியும், சமத்துவமானதோர் தேசத்தை நோக்கி பாதையில் செல்ல விளைகிறதோர் வாரமாகும்.

# அவுஸ்திரேலிய மக்கள்

ஏறத்தாழ 22 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட அவுஸ்திரேலியா உலகின் பலதரப்பட்ட மக்களை அடக்கிய சமுதாயங்களில் ஒன்றாகும். பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்கள் மொத்த சனத்தொகையில் 2.5 விழுக்காடு ஆவர். அவுஸ்திரேலியக் குடிமக்களில் கால் பகுதிக்கும் மேலானோர் கடல் கடந்த நாடுகளில் பிறந்தவர்கள், மற்றும் இவர்கள் 200-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து வந்தோராவர்.சனத்தொகையின் இந்த பரந்துவிரிந்துபட்ட தன்மையின் காரணமாக பலவகைப்பட்ட மொழிகளும், சமய நம்பிக்கைகளும், மரபுகளும், கலாசாரங்களும் அவுஸ்திரேலியாவில் காணப்படுகின்றன.

காமன்வெல்த் நாடுகளின் ஒரு உறுப்பினராக, அவுஸ்திரேலியா இன்னமும் ஐக்கிய இராச்சியத்துடன் நெருங்கிய உறவுகளை வைத்துள்ளது.

அவுஸ்திரேலியர்கள், அவுஸ்திரேலியக் குடியுரிமையில் பெருமை கொள்கிறார்கள், இது நமது வேற்றுமையுள்ள சமுதாயத்தை ஒன்றிணைக்கும் முக்கியமானதோர் பிணைப்பாகும். அவுஸ்திரேலிய குடியுரிமை தினத்தை, ஒவ்வொரு ஆண்டும் 17 செப்டம்பர் தேதியன்று கொண்டாடுகிறோம். இது, நமது நாட்டைக் கட்டமைப்பதிலும் நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் நாம் வகிக்கும் பங்கினைப் பிரதிபலிப்பதற்கான, அனைத்து அவுஸ்திரேலியக் குடிமக்களுக்ககுமானதோர் தினமாகும்.

# அவுஸ்திரேலியாவின் பொருளாதாரம்

அவுஸ்திரேலியாவிற்கு நிலையானதும், போட்டியிடக்கூடியதுமான பொருளாதாரம் இருக்கிறது, அதோடு இநாடு, தனது துடிப்புள்ள, திறமையான பணியாளர்களை மதிக்கிறது. அவுஸ்திரேலியாவில் மக்கள் அனுபவித்து வருகிற வாழ்க்கைத் தரம், உலகில் மிக உயர்ந்தவற்றில் ஒன்றாகும்

### Dick Smith (பிறப்பு 1944)

Dick Smith அவுஸத்திரேலியாவின் முன்னணி வர்த்தகர்களில் ஒருவர், துணிகரசெயல்வாதி மற்றும் பரோபகாரி. மின்னணு சாதனத் தொழிலில் தனது முதல் வெற்றியைச் சந்தித்தார், அவுஸ்திரேலியாவின் மேம்பாட்டிற்கென தனது செல்வத்தை இவர் பயன்படுத்தியுள்ளார். அவுஸ்திரேலியப் பொருட்களை மட்டுமே பயன்படுத்தி உணவு வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றை இவர் துவக்கினார், மற்றும் பல நிறுவனங்கள் அவுஸ்திரேலியாவின் கையை விட்டு அகலாமல் இருப்பதற்காக பல மில்லியன் டாலர்களை இவர் முதலீடு செய்துள்ளார்.

1986-ல் 'ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலிய'ராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான விருது ஒன்றையும் இவர் பெற்றார். வெப்ப வாயு பலூன் மூலமாக அவுஸ்திரேலியாவையும், டாஸ்மன் கடலையும் முதலில் கடந்தவர் இவர்தான். தனது துணிகர மனப்பான்மை, வர்த்தக வெற்றி மற்றும் அவுஸ்திரேலியாவின் மீது கொண்ட ஆழ்ந்த பற்று ஆகியவற்றிற்கு இவர் பெயர் பெற்றவர்.



## தொழில் சந்தை

அவுஸ்திரேலியாவின் ஸ்திரமான நவீன நிதி நிறுவனங்களும், கறாரான வரி மற்றும் வர்த்தக விதிமுறைகளும் அவுஸ்திரேலியத் தொழில் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுகின்றன. சுற்றுலா, கல்வி மற்றும் நிதிசார் சேவைகளை உள்ளடக்கிய சேவை வழங்கும் தொழில் துறையானது அவுஸ்திரேலிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவை உருவாக்குகின்றன.

அவுஸ்திரேலியாவின் பொருளாதார ஸ்திரத்தன்மை, அதை முதலீட்டிற்கான கவர்ச்சிகரமான இலக்காக ஆக்குகிறது. அவுஸ்திரேலியாவின் பங்குச் சந்தையானது ஆசியா-பசுபிக் பகுதியில் ஜப்பானுக்கு அடுத்து இரண்டாவது பெரிய சந்தையாகும்.

## வர்த்தகம்

ஜப்பான், சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென் கொரியா, நியூசிலாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் அவுஸ்திரேலியாவின் பெரும் வர்த்தகப் பங்காளிகளாகும். அவுஸ்திரேலியாவின் முக்கிய ஏற்றுமதிகள், நிலக்கரி, இரும்புத்தாது, இயற்கை எரிவாயு மற்றும் கல்வி மற்றும் சுற்றுலா சேவைகளாகும். நமது பொருளாதாரம் அனைவரையும் வரவேற்பதாகும், மற்றும் நமது பொருளாதார வளத்தில் வர்த்தகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

## சுரங்கத்தொழில்

நிலக்கரி, செம்பு, திரவ இயற்கைவாயு மற்றும் தாது மணல் ஆகியவை இயற்கை வளங்கள் அவுஸ்திரேலியாவில் அதிகம் உள்ளன. இவை உலகெங்கிலும் அதிகத் தேவையில் உள்ளன.

# ஒரு உலகப் பிரசையாக அவுஸ்திரேலியா

உலக நாடுகளில் ஒரு முக்கியமான நாடாக தான் விளங்குவது குறித்து அவுஸ்திரேலியா பெருமிதம் கொள்கிறது. நம்மை விடக் குறைவான வசதிவாய்ப்புகளைக் கொண்ட நாடுகளுக்கு உதவுவதன் மூலம் இதை அவுஸ்திரேலியா நிரூபிக்கிறது.

## சர்வதேச உதவி மற்றும் மனிதாபிமான முயற்சிகள்

வளர்ந்துவரும் நாடுகளில் காணப்படும் வறுமையைக் குறைக்கவும், இந்த நாடுகளின் நீடித்த முன்னேற்றத்தை உறுதி செய்யவும் அவுஸ்திரேலியாவின் சர்வதேச நாடுகளுக்கான உதவித் திட்டம் ஒத்தாசை செய்கிறது. நமது மண்டலப் பகுதியிலும், உலகில் உள்ள இதர நாடுகள் பலவற்றிற்கும், அங்குள்ள மக்களுக்கும் இவ்வுதவியை நாம் வழங்கி வருகிறோம்.

நமது நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ இயற்கை அழிவுகள் நிகழும்போது தனது பரந்த தாராள மனப்பான்மையை அவுஸ்திரேலியா காண்பிக்கிறது. தொடர்ந்து இன்னல்களைச் சந்தித்துவரும் நாடுகளுக்கும் தவறாமல் நன்கொடை அளித்து வருகிறோம். நமது மனிதாபிமானத் திட்டங்களில் அவுஸ்திரேலியா கொண்டுள்ள பற்றுறுதி அவுஸ்திரேலியாவிற்கே உரித்தான தன்மையைக் காட்டுகிறது.

2018 ஆம் ஆண்டில், டாக்டர் ரிச்சர்டு ஹாரிஸ் மற்றும் டாக்டர் கிரெய்க் சல்லென் ஆகியோருக்கு இரண்டாவது மிக உயர்ந்த அவுஸ்திரேலிய வீரதீர அலங்கார விருதையும், தி ஸ்டார் ஆஃப் கரேஜ் விருதையும், அதோடு கூட மெடல் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் அவுஸ்திரேலியா (OAM) விருதையும், தாய்லாந்தில் வெள்ளம் புகுந்த குகை ஒன்றிலிருந்து 12 கால்பந்தாட்ட இளம் வீரர்களையும் அவர்களது பயிற்சியாளரையும் மீட்டதற்காக வழங்கினார்கள்.

## உலக அரங்குகளில் அவுஸ்திரேலியாவின் தீவிரப் பங்கு

1945-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை United Nations (UN) துவங்கியதில் இருந்தே அதன் முக்கிய உறுப்பினராக அவுஸ்திரேலியா இருந்து வந்துள்ளது. 1951-ஆம் ஆண்டின் ஐக்கிய நாட்டு அகதிகள் உடன்படிக்கையின் கீழ் அகதிகளென அடையாளம் காணப்படுவோருக்கு அவுஸ்திரேலியா பாதுகாப்பு வழங்கி வருகிறது. வளரும் நாடுகளில் ஐக்கிய நாட்டு சபை மேற்கொள்ளும் அமைதி காக்கும் முயற்சிகளுக்கும், மனிதாபிமான மற்றும் நெருக்கடி நேர உதவிகளுக்கும் நாம் பங்களிப்பாற்றுகிறோம், மற்றும் ஐக்கிய நாட்டு சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பிலும் நாம் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளோம்.

அவுஸ்திரேலியா 1971-ஆம் ஆண்டி, 'பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான அமைப்பு' (Organisation for Economic Cooperation and Development (OECD)) எனும் அமைப்பின் முழு உறுப்பினாகியது. தனது உறுப்பினர்களாக உள்ள 30 நாடுகளிலும், இதர வளரும் நாடுகளிலும் பொருளாதார, சமூக மற்றும் வேலைவாய்ப்புச் சூழ்நிலைகளை முன்னேற்றம் அடையச் செய்வதை இந்த OECD அமைப்பு தனது குறிக்கோளாய்க் கொண்டுள்ளது. அதே வேளையில், உலக வர்த்தகத்தையும் விரிவுபடுத்த □□□□ முயலுகிறது.

ஆசிய பசுபிக் மண்டல நாடுகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்ற கருத்தை அவுஸ்திரேலியா வலுவாக ஆதரிக்கிறது. 'ஆசிய-பசுபிக் மண்டலப் பொருளாதார ஒத்துழைப்பு' (Asia-Pacific Economic Cooperation (APEC)), 'கிழக்கு ஆசிய உச்ச அரங்கு (The East Asia Summit (EAS)), 'தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பிற்கான பிராந்திய அரங்கு (The ASEAN Regional Forum (ARF)) மற்றும் 'பசுபிக் தீவுகள் அரங்கு' (The Pacific Islands Forum (PIF)) எனும் அமைப்புகளின் முக்கிய உறுப்பினராக அவுஸ்திரேலியா விளங்கி வருகிறது.

### Dr Catherine Hamlin AC (பிறப்பு 1924–2020)

துன்பம் மிக்க வாழ்க்கையிலிருந்து எத்தியோப்பிய நாட்டு இளம் பெண்களை மீட்டமைக்காக மகளிர் மருத்துவரான Dr Catherine Hamlin பிரபல்யமடைந்தார். 1959-ஆம் ஆண்டிலிருந்து ஆடிஸ் அபாபா நகரில் தங்கி பிரசவத்தின் போது பெண்களுக்கு ஏற்படக்கூடிய 'அப்ஸ்டெட்ரிக் ஃபிஸ்டுலா' எனப்படும் காயத்தினால் பாதிப்படையும் பெண்களுக்கு கேத்தரின் ஹேம்லின் உதவி வருகிறார். இப்படிப் பாதிக்கப்பட்ட பெண்களால் தமது உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்த இயலாது எனும் காரணத்திற்காக இப்பெண்கள் சமூகத்தினரால் தீண்டப்படாதவராக ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.

கேத்தரினும், அவரது கணவரும் 'ஆடிஸ் அபாபா ஃபிஸ்டுலா மருத்துவமனை' எனும் அமைப்பை நிறுவினர். இவர்களது முயற்சிகளின் காரணமாக ஆயிரக்கணக்கான பெண்கள் குணமடைந்து தமது கிராமங்களுக்குத் திரும்பி எப்பொழுதும் போல ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர்.

1995-ஆம் ஆண்டில் 'கம்பேனியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் அவுஸ்திரேலியா' எனும் அவுஸ்திரேலியாவின் மிகவும் உயர்ந்த விருது டாக்டர் கேத்தரின் ஹேமில்டனுக்கு வழங்கப்பட்டது



# நோபல் பரிசு வென்ற அவுஸ்திரேலியர்கள

விஞ்ஞான மற்றும் மருத்துவ ஆய்வுகளுக்குப் பெயர் பெற்ற நாடாகும் அவுஸ்திரேலியா. பின்வரும் அவுஸ்திரேலியர்கள் இத்துறைகளில் நோபல் பரிசுகள் வென்றுள்ளனர்.

- **பேராசிரியர் றWilliam Bragg (1862 – 1942) மற்றும் Lawrence Bragg (1890 – 1971) பௌதீகவியல் துறை வல்லுநர்கள்**
  'எக்ஸ்-ரே'க்களைப் பயன்படுத்தி படிகங்களின் அமைப்பினைப் பகுப்பாய்வு செய்த தமது சேவைக்காக தந்தையான வில்லியம் பிராக், மற்றும் புதல்வாரன லாரன்ஸ் பிராக் ஆகியோர் 1915-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை இணைவாகப் பெற்றனர்.
- **Sir Howard Walter Florey (1898 – 1968) நோய் ஆய்வு மருத்துவர்**
  'பல தொற்றுநோய்களைக் குணப்படுத்தவல்ல பெனிசிலின் எனும் மருந்தைக் கண்டுபிடித்ததற்காக' சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தில், அடிலெய்ட்- இல் பிறந்த ஹோவர்ட் ஃப்ளோரி 1945-ஆம் வருட உடலியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை இன்னொருவருடன் இணைந்து பெற்றார்.
- **Sir Frank Macfarlane Burnet (1899 – 1985) மருத்துவ விஞ்ஞானி, உயிரியலாளர்**
  'நோய் எதிர்ப்புத் திறன் அளிக்கப்படும் முறையைக் கண்டுபிடித்த'மைக்காக விக்டோரியா மாநிலத்தில் பிறந்த ஃபிராங்க் பர்னட் அவர்களுக்கு 1960-ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு இணைவாய் வழங்கப்பட்டது.
- **Sir John Carew Eccles (1903 – 1997) உடலியல் நிபுணர்**
  நரம்பணுச் சவ்வின் ஓரப் பகுதி அல்லது மையப் பகுதிகளில் உணர்வுகள் அதிகமாவது அல்லது குறைவது ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட மின்னணுச் செயற்பாடுகள் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்கென மெல்பர்ன் நகரில் பிறந்த ஜான் எக்கிள்ஸ் -க்கு 1963-ஆம் ஆண்டின் உடலியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- **Sir Bernard Katz (1911–2003), மருத்துவர் மற்றும் உயிரியலாளர்**
  ஜெர்மனியில் பிறந்த பெர்னார்டு கார்ஸ் 1941 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியக் குடிமகனானார். இவர், உடல் இயங்கியல் அல்லது மருத்துவத்தில், நரம்பு முனைகளில் மனித சமிக்கை கடத்திகள் மற்றும் அவற்றின் இருப்பு வைத்தல், விடுவித்தல், செயல்முடுக்குதல் ஆகிய செயல்பாடு சம்பந்தமான கண்டுபிடிப்புகளுக்காக, 1970 ஆம் ஆண்டில் நோபல் பரிசினைப் பெற்றார்.
- **பேராசிரியர் John Warcup Cornforth (1917 – 2007) வேதியியலாளர்**
  ஜான் கார்ன்ஃபர்த் சிட்னியில் பிறந்தவர். 'என்சைம் எனும் வேதிப் பொருளால் தூண்டப்பட்ட எதிர்ச்செயல்களின் வேதியியல் தன்மை குறித்த தமது ஆய்வுகளுக்காக 1975-ஆம் வருடத்தின் வேதியியல் துறைக்கான நோபல் பரிசு இணைவாக வழங்கப்பட்டது.
- **பேராசிரியர் Peter Doherty (பிறப்பு 1940) நோயெதிர்ப்புத் திறன் ஆய்வாளர்**
  பீட்டர் டோஹர்டி குவீன்ஸ்லாந்து மாநிலத்தில் பிறந்தவர். 'உயிரணுக்களின் (செல்) உதவியோடு ஏற்படுத்தப்பட்ட நோய் எதிர்ப்புத் திறனின் குறிப்பிட்ட தன்மை' குறித்து தாம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கென 1996-ஆம் வருடத்திற்கான உடலியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு இவருக்கு (கூட்டாக) வழங்கப்பட்டது.
- **பேராசிரியர் டBarry Marshall (பிறப்பு 1951) குடல்நோய் நிபுணர் (வயிற்று-சீரணக் கோளாறு மருத்துவர்) மற்றும் டாக்டர்**
  Robin Warren (பிறப்பு 1937) மருத்துவர் 'ஹெலிகொபேக்டர் பைலொரி எனும் நோய்நுண்மத்தைக் கண்டுபிடித்ததற்காகவும், குடல்வாயு மற்றும் குடல் புண் ஆகிய நோய்களில் இந்த நோய்நுண்மத்தின பங்கு என்ன என்று ஆய்வு செய்ததற்காகவும் 2005-ஆம் வருட உடலியல் அல்லது மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு பெரி மார்ஷல் மற்றும் ராபின் வாரன் ஆகியோருக்கு (கூட்டாக) வழங்கப்பட்டது.
- **பேராசிரியர் நElizabeth Helen Blackburn (பிறப்பு 1948), உயிரியலாளர்**
  எலிஸபெத் பிளாக்பர்ன் ஹோபர்ட் நகரில் பிறந்தவர். "குரோமோசோம் எனப்படும் மரபுக் கூறுகள் எவ்வாறு டெலிமியர்களாலும் மற்றும் என்ஸைம் டெலோமெரேஸ்களாலும் பாதுகாக்கப்படுகின்றன என்று கண்டுபிடித்தமைக்காக" 2009-ஆம் ஆண்டில் உடற்கூற்றியல் மற்றும் மருத்துவத்திற்கான (கூட்டாக) நோபல் பரிசினை இவர் பெற்றார்.
- **பேராசிரியர் Brian P. Schmidt (born 1967), வானியல் அறிஞரான**
  Brian P. Schmidt 2011 (கூட்டாக) ஆம் ஆண்டில், 'தொலைதூர சூப்பர்னோவாக்களைக் கண்காணித்ததன் வாயிலாக, பிரபஞ்சத்தின் முடுக்கிவிட்ட விரிவாக்கத்தைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசினைப் பெற்றார்.

இலக்கிய உலகிற்கான நோபல் பரிசையும் அவுஸ்திரேலியர் ஒருவர் வென்றுள்ளார்.

- **Patrick White (1912 – 1990) புதினப் படைப்பாளர் மற்றும் நாடகாசிரியர்.**
  'இலக்கிய உலகில் புது சகாப்தம் ஒன்றைப் படைக்கும் வகையில் காவியத் தொனியில் மனரீதியாகக் கதை சொல்லும் திறனை அறிமுகப்படுத்தியதற்காக', அவுஸ்திரேலியப் பெற்றோருக்கு லண்டனில் பிறந்த பேட்ரிக் வைட் அவர்களுக்கு 1973-ஆம் ஆண்டிற்கான இலக்கியத்' துறை நோபல் பரிசு வழங்கப்பட்டது.



# பகுதி ஐந்து

## நமது அவுஸ்திரேலிய வரலாறு

# நமது அவுஸ்திரேலிய வரலாறு

அவுஸ்திரேலியாவின் வரலாற்றை பலரும், பல நிகழ்வுகளும் வடிவமைத்திருக்கின்றன

## பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்

உலகின் தொடர்ந்து நீடித்துவரும் கலாசாரங்களில் மிகத் தொன்மையானது அவுஸ்திரேலியப் பூர்வீகக் குடிமக்களது கலாசாரங்களாகும்.

தொல்பொருள் ஆராய்ச்சிப் பதிவேடுகள், இத்தகைய பூர்வீகக் குடிகள் 65,000 ஆண்டகளுக்கும் 40,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்பே அவுஸ்திரேலியாவிற்கு வந்தடைந்ததாகச் சொல்கின்றன; இருந்தாலும், பூர்வீகக் குடிகளோ, இந்த மண் உருவான வரலாற்றிற்கே இவர்கள் தான் முதன்மையானவர்கள் என்பதாகவும், இவர்களது ஆக்க வரலாறு காலம் ஆரம்பிப்பதிலிருந்து துவங்குகிறது என்பதாகவும் நம்புகிறார்கள்.

பூர்வீகக் குடிகளிடத்திலும், தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு வாசிகளிடத்திலும், இன்றைக்கும் அவர்களை வழிநடத்திச் செல்கிற புரதான கால நம்பிக்கைகளும், பாரம்பரியங்களும் இருக்கின்றன. இவர்களுக்கு இம்மண்ணோடு ஆழமான தொடர்பு இருக்கிறது, அது அவர்களது கதைகளிலும், கலையிலும், நடனத்திலும் வெளிப்படுகிறது.

### மொழிகள்

பிரித்தானியக் குடியேற்றத்திற்கு முன்பாக, ஏறத்தாழ 700 மொழிகளும், கிளை மொழிகளும் அபோரிஜினி மற்றும் ட ொரெஸ் நீர்ச்சந்தித் தீவகத்தினரால் பேசப்பட்டு வந்தன. இன்றும் கிட்டத்தட்ட 100 மொழிகள் இப்போதும் பயன்பாட்டில் இருக்கின்றன, இருந்தாலும், இருபது மொழிகளுக்கும் குறைவானவற்றையே அவர்களது குழந்தைகளுக்கும் எடுத்துச் செல்கிறார்கள். பூர்வீகக் குடிமக்களது வாய்வழி வரலாற்றுக் கதைகள் மிக முக்கியமானவை, ஏனெனில் இக்கதைகள் இந்த மண்ணைப் பற்றியும் இம்மக்களைப் பற்றியும் சொல்பவையாகும்.

### கனவு

‘கனவு’ என்ற மேலைனாட்டுப் பதத்தை, அறிவு, நம்பிக்கை மற்றும் பூர்வீகக் குடிகளின் வாழ்க்கையை வழிநடத்திச் செல்கிற பழக்கம் ஆகியவற்றின் அமைப்பை விவரிக்கவே பெரும்பாலும் உபயோகிக்கிறோம்.

கனவுக் கதைகளைக் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர்களும், மூத்தோர்களும் சொல்லி வந்தனர். இம் மக்கள் வாழும் நிலம் உருவெடுத்தது எப்படி என்றும், இதில் வாழும் மாந்தர் எப்படித் தோன்றினர் என்றும், குழந்தைகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும் இதற்கு என்ன காரணம் என்றும் இக்கதைகள் கற்பித்தன. உணவு எங்கு கிடைக்கும் என்பது போன்ற செயல்முறை சார்ந்த பெருமதிமிக்க பாடங்களையும், இக் கதைகள் குழந்தைகளுக்கு போதித்தன.

கனவுக் கதைகளை இசை, பாடல்கள் மற்றும் நடனம் என்பனவற்றின் மூலமாகவே சொன்னார்கள். பூர்வீகக்குடியினர் ஆடல் பாடல்களில் ஈடுபடும் போது தமது மூதாதையருடன் ஆழ்ந்த தொடர்பு கொள்வதாக உணர்கின்றனர்

கற் செதுக்கல்கள் அல்லது ஓவியங்கள் மற்றும் நிலச் சித்திரங்கள் அபோரிஜினி மக்களது ஆரம்பகாலக் கலை வடிவங்களாகும். மத்திய அவுஸ்திரேலியப் பகுதி மக்கள் தமது நிலத்தை அல்லது கனவுக்கதைகளைக் காட்டும் விதத்தில் புள்ளிகள் மற்றும் வளையங்களைக் கொண்ட ஓவியங்களைத் தீட்டினர். அவுஸ்திரேலியாவின் வட பகுதிகளில் உள்ளவர்கள் மனிதர்கள், விலங்குகள் மற்றும் ஆவிகளின் உருவங்களை ஓவியமாய் வரைந்தனர்.

கனவுலகம் என்பது பூர்வீகக் குடியினருக்கு இன்றும் முக்கியமானதாக விளங்குகிறது.



கக்காடு பூர்வீகக் குடிகள் ஓவியம்

# அவுஸ்திரேலியாவிற்கு வந்த முதல் ஐரோப்பியர்கள்

## ஆரம்பகால ஐரோப்பியக் கடற்பயணங்கள்

‘Terra Australis Incognita’ என்று தாம் அழைத்த தென் திசையிலுள்ள பெயர் தெரியாத நிலப் பரப்பின் சில பகுதிகளை ஐரோப்பிய கடற்பயணியர்கள் 17-ஆம் நூ ற்றாண்டில் கண்டுபிடித்தனர். 1606-ல் றWillem Janszoon எனும் டச்சுக்காரர் அவுஸ்திரேலியாவின் வட முனையிலுள்ள Cape York Peninsula தீபகற்பப் பகுதியின் மேற்குப் புறக் கடல்வழிப் பாதையைக் வரைந்தார். ஏறத்தாழ இதே சமயத்தில் டLuís Vaez de Torres என்பவரால் வழி நடத்தப்பட்ட ஸ்பெயின் நாட்டுக் கப்பல் ஒன்று இக்கண்டத்தின் வட புறமாயுள்ள நீர்ச்சந்தியின் ஊடே பயணித்தது.

1600-களின் பிற்பகுதியில் மேற்கு அவுஸ்திரேலியக் கடற்கரைப் பகுதிகளை டச்சு மாலுமிகள் கண்டறிந்தனர். இவர்கள் இந்நிலப்பகுதியை ‘நியூ ஹாலந்து’ என்றழைத்தனர்.

1642 ஆம் ஆண்டில் Abel Tasman எனும் கடற்பயணி புதிய நிலப்பகுதி ஒன்றைக் கண்டறிந்து, அதற்கு ’வான் டீமன் பூமி’ (இப்போது தாஸ்மானியா) எனப் பெயர் சூட்டினார். ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவுள்ள அவுஸ்திரேலியக் கடற்கரைப் பகுதிகளை இவர் வரையவும் செய்தார். இவரது ‘நியூ ஹாலந்து’ நிலப் பகுதியின் பூரணப்படுத்தப்படாத வரைபடம் வட புறத்தில் இந்த நாடு பபுவா நியூ கினி-யுடன் இணைகிறது என்ற இவரது நம்பிக்கையைப் பிரதிபலித்தது.



ஆபேல் தஸ்மான் அவர்களின் நியூ ஹாலந்து வரைபடம், 1644

அவுஸ்திரேலிய மண்ணில் காலடி வைத்த முதல் ஆங்கிலேயர் றWilliam Dampier என்வராவார். 1684-ஆம் ஆண்டில் இவர் அவுஸ்திரேலியாவின் வடமேற்குக் கரையில் இறங்கினார். இங்குள்ள நிலப்பகுதி வறண்ட புழுதிமண்ணாக இருந்ததினால் வணிகத்திற்கோ அல்லது குடியேற்றத்திற்கோ இவ்விடம் உகந்ததல்ல என்று இவர் எண்ணினார்.

## Captain James Cook

‘நுளெநயஎழரச’ எனும் தன் கப்பலில் தJames Cook எனும் ஆங்கிலேயர் 1770-ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை வந்தடையும் வரையிலும் இப்பகுதி கண்டறியப்படாத பகுதியாக இருந்துவந்தது. பசிபிக் மகா சமுத்திரத்தின் தென் பகுதியில் புது நிலங்களைக் கண்டறியும் பொருட்டு கடற்பயணம் ஒன்றிற்காக இவர் பிரிட்டிஷ் அரசினால் அனுப்பப்பட்டிருந்தார். அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையைக் கண்டறிந்த இவர், தற்கால சிட்னி நகருக்குச் சிறிது தென் புறமாயுள்ள Botany Bay எனும் இடத்தில் கரையிறங்கினார். இந்நிலப்பகுதியை ‘நியூ சவுத் வேல்ஸ்’ என அழைத்த ஜேம்ஸ் குக், இதை King George III மன்னருக்கென உரிமை கொண்டாடினார்.

## தண்டனைக் கைதிகளின் வரவு

முதல் ஐரோப்பியக் குடியேறிகளில் பெரும்பாலானோர்; தண்டனைக் கைதிகள் என்ற வகையில் அவுஸ்திரேலியா தனித்துவம் பெறுகிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகள் சுதந்திரம் அடைந்த பிறகு, பிரித்தானியாவால் தனது தண்டனைக் கைதிகளை அங்கு அனுப்ப இயலாமல் போனது. 1786 இல் பிரித்தானியா தண்டனைக் கைதிகளை தனது புதிய குடியேற்றமான நியூ சவுத் வேல்ஸிற்கு அனுப்பத் தீர்மானித்தது.

## முதல் குடியேற்றம்

நியூ சவுத் வேல்ஸ் குடியேற்றங்களின் முதல் கவர்னர், கேப்டன் ஆர்தர் ஃபிலிப் என்பவராவார். பிரிட்டனிலிருந்து புறப்பட்ட முதல் 11 கப்பல்களை உலகின் மறுபக்கத்தில் உள்ள அவுஸ்திரேலியாவிற்கு இவர் ஜனவரி 26 1788 ஆம் ஆண்டு, பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்த்தார். ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளைத்தான் ‘அவுஸ்திரேலிய தினமாக’ (யAustralia Day) நாம் கொண்டாடுகிறோம்.



பிரித்தானியாவிலிருந்து வந்த முதல் கப்பல் தொகுதி,
1788 ஆம் ஆண்டில் Sydney Cove க்கு வந்தே சேருதல்

## குடியேற்றத்தின் ஆரம்ப வருடங்கள்

குடியேற்றத்தின் துவக்க ஆண்டுகள் மிகவும் கடினமானவை. யாரும் பட்டினி கிடக்கக் கூடாது என்பதற்காக தான் மற்றும் தனது அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் ஒரே அளவான உணவே தரப்பட வேண்டும் என்று ஆளுநர் ஃபிலிப் உத்தரவிட்டிருந்தார். அவரது சமயோசித புத்தியும், திடமமன மன உறுதியும் இந்தக் கடினமான ஆரம்பகால வருடங்களில் குடியேற்றம் நீடிக்க உதவியது.

தண்டனைக் கைதிகளின் கட்டாய உழைப்பின் மூலமாகவே ஆரம்பகாலக் குடியேற்றத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கடினமான வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. தண்டணைக் காலம் முடிந்த பிறகு சுதந்திரமாய் வெளியேறிய ஆண்களும், பெண்களும் சமூகங்களில் கலந்து பணியாற்றவும், சொந்த குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவும் தொடங்கினர்.

## புது வாய்ப்புக்கள்

அவுஸ்திரேலியாவில் குடியேறிய முதல் ஐரோப்பிய சனங்களில் ஆங்கிலேயர்களும், ஸ்கொடிஷ் மக்களும், வெல்ஷ் மக்களும், ஐரிஷ் மக்களும் அடங்குவர். ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் அயர்லாந்து மக்கள் ஆங்கிலேயருடன் அடிக்கடி போரிட்டு வந்தனர், ஆனால் அவுஸ்திரேலியாவில் இந்த நான்கு வகுப்பினரும் சுமுகமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து, கூடி உழைத்தனர்.

கைதிகளுக்கும், முன்னாள் கைதிகளுக்கும் குடியேற்றங்களில் புதிய வாய்ப்புகள் கிட்டின. இராணுவ அதிகாரிகள் வியாபாரம் செய்து பணம் சம்பாதிப்பதில் தமது நேரத்தை செலவிட்டனர், மற்றும் தமக்கு உதவுவதற்காக கைதிகளையும், முன்னாள் கைதிகளையும் வேலைக்கு அமர்த்தினர். விரைவில், பழைய கைதிகளில் சிலர் விவசாயிகளாகவும், கைத்தொழிலர்களாகவும், கடை நடத்துபவர்களாகவும், பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களாகவும் வெற்றிகரமான தொழில்களை மேற்கொண்டனர்.

### Caroline Chisholm (1808–77)



Caroline Chisholm என்பவர் ஆரம்பகாலக் குடியேற்றங்களில் பெண்களது சூழ்நிலைகளில் முன்னேற்றம் ஏற்படுத்திய முன்னணி சமூக சீர்திருத்தவாதி ஆவார். இராணுவ அதிகாரியான தனது கணவருடனும், ஐந்து குழந்தைகளுடனும் 1838-ஆம் வருடம் கேரலின் அவுஸ்திரேலியாவுக்கு வந்தார். சிட்னி நகரில், தெருக்களில் வாழ்ந்து வந்த புலம்பெயர்ந்த பெண்களுக்கு இவர் உதவி வந்தார். சில ஆண்டுகளுக்குள்ளாகவே, புலம்பெயர்ந்த மகளிருக்கான 16 தங்கும் விடுதிகளை இக்குடியேற்றமெங்கும் இவர் நிறுவினார்.

குடியேற்றங்களுக்குக் கப்பல் மூலமாகப் பயணித்து வருவோரது கப்பல் பயண வாழ்க்கை நிலைகளை மேம்படுத்த இவர் பாடுபட்டார். கதியற்ற மக்கள் சுதந்திரமாக வாழவும், வறுமையிலிருந்து மீளவும் வழி செய்யும் வகையில் அவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் ஒன்றை இவர் ஏற்பாடு செய்தார்.

இன்று, அவுஸ்திரேலியாவில் உள்ள பல பாடசாலைகளுக்கு கேரலின் சிஷோம் நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'புலம்பெயர்ந்தோரது நண்பர்' என அழைக்கப்படும் இவர், மக்கள் புதியதொரு வாழ்க்கையைத் துவங்க அயராது பாடுபட்டமைக்காக நினைவு கூரப்படுகிறார்.

## Governor Macquarie

ஆளுநர் பிளிப் அவர்களுடன் சேர்ந்து, கவர்னர் லேக்லன் மெக்கொயர் அவர்களும் நமது ஆரம்பகால வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளார். 1810- ஆம் ஆண்டிலிருந்து 1821 வரை நியூ சவுத் வேல்ஸ் குடியேற்றத்தை இவர் ஆளுகை செய்து வந்தார், இவர் இக்குடியேற்றத்தை கைதிகளின் குடியேற்றமாகவன்றி சுதந்திரமனதொரு குடியேற்றமாக மாற்றியமைத்தார். விவசாய முறைகளை மேம்படுத்திய இவர், புது சாலைகளையும், பொதுமக்களுக்கான வசதிகளையும் அமைத்தார்.

கல்வி வசதிகளிலும் பணத்தைச் செலவிட்ட மெக்காரி பழைய கைதிகளது உரிமைகளையும் மதித்தார். முன்னாள் குற்றவாளிகள் சிலரை நீதிபதிகளாகவும், அரசாங்க ஊழியர்களாகவும் இவர் நியமித்தார்.

இக்குடியேற்றத்தில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்தியதற்காக நமது வரலாற்றில் மதிப்பு மிக்கதொரு இடத்தை இவர் பெறுகிறார். நியூ சவுத் வேலஸ் மாநிலத்திலுள்ள மெக்காரி பல்கலைக்கழகத்திற்கு இவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## நமது கைதியர் பாரம்பரியம

மெக்காரியின் பதவிக்காலத்தை அடுத்து, தனியொரு மனிதருக்கு அதிகூடிய அதிகாரத்தைத் தரும் பதவியாக ஆளுநர் பதவி இருப்பதாக எண்ணப்பட்டது, எனவே அடுத்த ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவதற்கென 'நியூ சவுத் வேல்ஸ் சட்டமன்றக் குழு' ஒன்று 1823 இல் ஏற்படுத்தப்பட்டது.

கிரேட் பிரிட்டன் நியூ சவுத் வேல்சுக்குக் கைதிகளை அனுப்புவதை 1840 இலும், தஸ்மேனியாவுக்கு அனுப்புவதை 1852 இலும், மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதை 1868 இலும் பிரித்தானியப் பேரரசு நிறுத்தியது. ஒட்டு மொத்தமாக, 160 000 சிறைக் கைதிகள் அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். முன்னாள் கைதிகளுக்கும், குடியமருவோருக்கும் இடையே இருந்த வேறுபாடு மெதுவாக மறைந்தது. 1850-ஆம் ஆண்டிலிருந்து தம்மைத் தாமே ஆண்டு வந்த குடியேற்றவாசிகள் மதிக்கத்தக்க சமுதாயாங்களை உருவாக்க விரும்பினர். அனேக அவுஸ்திரேலியர்கள், தங்களது குற்றப் பாரம்பரியத்தைப் பெருமையாகக் கருத ஆரம்பித்தனர்.

### ஐரோப்பியக் குடியேற்றத்திற்குப் பிறகு பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்

1788 ஆம் ஆண்டில், ஐரோப்பியக் குடியேற்றம் துவங்கிய போது 750,000-த்திலிருந்து 1.4 மில்லியன் வரையிலான அபோரிஜினி மற்றும் டொரஸ் நீர்ச்சந்தித் தீவக மக்கள் அவுஸ்திரேலியாவில் இருந்தனர் என்று மதிப்பிடப்படுகிறது. இந்த மக்கள் 250 தனித்தனி தேசங்களையும் 700 மொழிக் குழுக்களையும் சார்ந்தவர்களாக இருந்தனர்.

அவுஸ்திரேலியாவில் முதலில் குடியேறிய போது பிரித்தானிய அரசு அபோரிஜினி மக்களுடன் உடன்படிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. எனவே அபோரிஜினிகள் நிலத்திற்கு உரிமை கொண்டாடும் எண்ணம் இல்லாதவர்கள் என்று அரசாங்கம் எண்ணியது. ஆகவே, நிலங்களை அரசாங்கம் சுதந்திரமாகத் தன்வயப்படுத்தியது.

பூர்வீகக்குடி மக்கள் தமக்கே உரித்தான பொருளாதார முறைகளையும் புராதண காலம் தொட்டே தமது நிலத்தோடு பிணைப்பையும் கொண்டிருந்தனர். ஒரு காலத்தில் தங்களது சொந்த ஆட்சியின் கீழ் வாழ்ந்த அவர்கள், இப்போது புதிதாக வந்தவர்களின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டனர். புதிதாக வருபவர்களை வரவேற்றிருக்கவில்லை, அவர்களைப் பொதுவாக வரவேற்கவே இல்லை.

பிரிட்டிஷ் குடியேற்றங்கள் வந்ததன் காரணமாக, பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளின் வாழ்க்கை கடுமையாக மாறிப்போனது. குடியேற்றங்களை அமைப்பவர்கள் புதிய சமுதாய, பொருளாதார மற்றும் மத உத்தரவுகளை அமல்படுத்த முயன்றதால் உயிரிழப்புகள் ஏற்பட்டன, நிலங்கள் கைப்பற்றப்பட்டன. புதிய விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் நோய்கள் அறிமுகமாயின.

அபோரிஜினி மக்களுக்குத் தீங்கிழைக்கக் கூடாதென ஆரம்ப கால ஆளுநர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது, ஆனால் பிரிட்டிஷ் குடியேறிகள் அபோரிஜினிகளுக்கு சொந்தமான நிலங்களில் ஊடுருவினர், அத்துடன் அநேக அபோரிஜினி மக்கள் கொல்லப்பட்டனர். பொதுவாக, இப்படிப்பட்ட குற்றங்களுக்காக குடியேறிகள் தண்டிக்கப்பட்டதில்லை.

சில அபோரிஜினி மக்களும், ஐரோப்பியக் குடியேறிகளும் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். சில குடியேறிகள் அபோரிஜினி மக்களை ஆட்டு மந்தை மற்றும் கால்நடைப் பண்ணைகளில் வேலைக்கு அமர்த்தினர். ஆளுநர் மெக்காரி அவர்கள் அபோரிஜினி மக்களுக்குச் சொந்தமாக விவசாயத்திற்கென நிலங்களை வழங்கியதோடு அபொரிஜினிக் குழந்தைகளின் கல்விக்கென பாடசாலை ஒன்றையும் நிறுவினார். இருப்பினும், மிகச் சில அபோரிஜினி மக்களே குடியேறிகளைப் போல வாழ விரும்பினர். தமது கலாசாரப் பாரம்பரியங்களை இவர்கள் இழக்க விரும்பவில்லை.

நிலத்திற்காக ஏற்பட்ட மோதல்களில் பல அபோரிஜினி மக்கள் கொல்லப்பட்டனர். நிலத்திற்காக ஏற்பட்ட மோதல்களில் எத்தனை பூர்வீகக் குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்று அறியப்படவில்லை, ஆனால் பல்லாயிரக்கணக்கான அபோரிஜினி மக்கள் மாண்டனர் என்பதை நாமறிவோம். ஐரோப்பியர்களால் இந்த நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட நோய்களின் காரணமாக பல அபோரிஜினி மக்கள் இறந்தனர். அபோரிஜினி மக்களது உயிரிழப்பு பெரும் துன்பகரமானது.

## வரலாற்று மைல்கற்கள்

### உள்ளகப்பகுதிகளைக் கண்டறிதல்

நியூ சவுத் வேல்ஸின் ஆரம்பகாலக் குடியேறிகள் கடும் இன்னல்களை எதிர்கொண்டனர். அவுஸ்திரேலியாவின் மிகக் குறைவான நிலங்களே வளமானதாகும் வரட்சி காலங்களில் அல்லலுற்றாலும், இப்படிப்பட்ட சூழலைச் சமாளிக்கவும், அங்கு தொடர்ந்து வாழவும் அபோரிஜினி மக்கள் அறிந்திருந்தனர்.

நாட்டின் உட்புறப் பகுதிகளைக் கண்டறியும் முயற்சிகளில் சிட்னியில் குடியேறியவர்களுக்குப் பெரும் தடையாய் இருந்தது சிட்னிக்கும் மேற்காக 50 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள நீலமலைத் தொடர்தான். இறுதியாக, 1813-ல் Blaxland, Wentworth மற்றும் Lawson ஆகிய மூவர் இந்த மலைத் தொடரைக் கடந்தனர். இன்றும், நீல மலைகளின் ஊடாகச் செல்லும் இரயில் பாதைகளும், சாலைகளும் இந்த மூவரும் சென்ற வழிகளிலேயே அமைந்துள்ளன.

இந்த மலைகளின் மறு பக்கம் ஆடு மாடுகள் வளர்ப்பதற்கு ஏற்றா பரந்த நிலப்பகுதிகள் இருப்பதை இவர்கள் கண்டறிந்தனர். இருப்பினும், இப்பகுதியைக் கடந்து இன்னும் உட்பக்கமாகச் சென்ற போது வரண்ட பாலை நிலங்களே தென்பட்டன.

இங்கு தண்ணீர் கிடைப்பது அரிதாயிருந்தது, மற்றும் உணவு வகைகளை உடன் எடுத்துச் செல்வதும் கடினமாக இருந்தது. 1848-ஆம் ஆண்டில் இக்கண்டத்தை கிழக்கிலிருந்து மேற்காய்க் கடக்க முயன்ற ஜெர்மானியக் கண்டுபிடிப்பாளரான Ludwig Leichhardt என்பவர் காணாமற் போனார்.

1860-ல் Robert O'Hara Burke மற்றும் William John Wills என்ற இருவர் மெல்பர்ன் நகரிலிருந்து புறப்பட்டு தெற்கிலிருந்து வடக்காக அவுஸ்திரேலியாவை ஊடறுக்க முற்பட்டனர். பெரிய பயணக் குழு ஒன்றை இவர்கள் வழிநடத்தினர், ஆனால் பயணம் மிகக் கடினமானதாக இருந்தது. பர்க், வில்ஸ் ஆகியோர் கரடுமுரடான காட்டுப் பகுதிகளில் அனுபவமற்றவர்கள். 'Yandruwandha' எனப்படும் அபோரிஜினியரிடமிருந்து கைதேர்ந்த உதவியை இவர்கள் பெற்றிருந்தபோதிலும் இந்த இருவரும் திரும்பும் வழியில் மாய்ந்தனர். பர்க்கும், வில்சும் தம் முயற்சியில் தோல்வியுற்றாலும், கலை மற்றும் இலக்கியத்தில் அவர்களது பெயர் இன்றும் நிலைத்துள்ளது. நம் நாட்டின் நிலப்பகுதி எவ்வளவு கடுமையானது என்பதை எடுத்துக்காட்டும் ஒரு துயர நிகழ்ச்சியாகும் இது.



## குடியேறிகளும் முன்னோடிகளும்

குடியேறியவர்களுக்கு நல்ல நிலங்கள் கிடைத்த போதிலும், வாழ்க்கை மிகவும் கடுமையானதாகவே இருந்தது. வெள்ளப்பெருக்கு அல்லது கடும் வரட்சியைத் தொடர்ந்து, விவசாயிகள் அனைத்தையும் மீண்டும் தொடங்க வேண்டியிருந்தது. ஆயினும், மக்கள் கையூன்றி எழுந்து, தாங்களே போராடி மீண்டனர். இப்படிப்பட்ட கஷ்ட காலங்களைக் கடந்து வெல்பவர்களை 'அவுஸ்திரேலிய விடாமுயற்சியாளர்' (Aussie Battler') என்பர். இத்தகைய கடினமான காலங்களின் போது தைரியமாகச் செயல்பட்ட முன்னோடிகளுக்கு மரியாதை செய்யப்படுகிறது. வீட்டிலுள்ள ஆண்கள் தொலை தூரத்தில் இருக்கும் போது அல்லது அவர்கள் இறந்து விட்ட பிறகும், பெண்களே வியாபாரத்தையோ அல்லது பண்ணையையோ கவனித்து வந்தனர்.

இன்னல்கள் மிக்க இந்த ஆரம்ப காலங்களில்தான், அவுஸ்திரேலியருக்கே உரித்தான 'தோழமையுணர்வு' (Mateship') எனும் பாரம்பரியம் உருவானது. ஆட்டு உரோமம் கத்தரிப்பதற்காகவும், ஆடு-மாடுகளை மேய்ப்பதற்காகவும் உள்ளகப்பகுதிகளில் பயணம் செய்துவந்த ஆண்களிடையே இவ்வுணர்வு வலுவூன்றியிருந்தது. கஷ்ட காலங்களில் குடியிருப்பாளர்கள் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்தனர். இப்பாரம்பரியம் இன்றளவும் அவுஸ்திரேலியரது வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே இருக்கிறது.


## தங்க எழுச்சி

1851-ஆம் ஆண்டில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்ச்சி 'தேசத்தையே மாற்றிய நிகழ்ச்சி' என்று விவரிக்கப்படுகிறது. சிறிது காலம் சென்ற பிறகு, புதிய சுதந்திரக் குடியேற்றமான விக்டோரியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1852-ஆம் ஆண்டின் இறுதியில், அவுஸ்திரேலியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மற்றும் உலகெங்குமிருந்தும் தங்க வேட்டைக்காக விக்டோரியாவுக்கு 90 000 மக்கள் வந்திருந்தனர்.

'Eureka புரட்சி' அவுஸ்திரேலிய வரலாற்றில் ஜனநாயகத்தை எடுத்துக்காட்டும் ஒரு பெரும் நிகழ்வாய் நினைவு கூரப்படுகிறது. தங்கத்தை அகழ்ந்தெடுப்பதற்கான அனுமதிக் கட்டணங்களை வசூலிக்கும் போது அகழ்வோரை அரசுப் படைகள் மிகவும் கடுமையாய் நடத்தினர். அடிப்படை ஜனநாயக உரிமைகள் சாசனம் ஒன்றை அங்கீகரிக்கக் கோரி 1854 ஆம் வருடம் நவம்பர் மாதம் 11-ஆம் திகதியன்று 10,000 மக்கள் 'Bakery Hill இல் உள்ள Ballarat எனும் இடத்தில் ஒன்று திரண்டனர். தங்க அகழ்வு அனுமதிக்கு ஏகப்பட்ட பணத்தைக் கட்டணமாய்ச் செலுத்த இவர்கள் தயாராயில்லை. அத்துடன் விக்டோரியப் பாராளுமன்றத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான மக்களைத் தெரிவு செய்வதற்கான வாக்குரிமையையும் இவர்கள் கோரினர்.

இதைத் தொடர்ந்து, ‘Eureka Stockade’ Eureka சுரங்கங்களில் கட்டப்பட்டது. இங்கு தான் அகழ்வோர் ஒரு போராட்டக் கொடியைக் (தெற்கத்திய சிலுவையைக் கொண்டுள்ளது) கொண்டு, ஒருவருக்கொருவர் துணை நின்று, அவர்களது உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பதற்காகப் போராடுவது என்று சத்தியம் செய்தனர். 3 டிசம்பர் 1854 அன்று காலையில், போராட்டக்காரர்களைத் தாக்க அரசாங்க அலுவலர்கள் போர்வீரர்களை அனுப்பினார்கள். இம்மோதலின்போது தங்க அகழ்வோர் விரைவில் தோற்கடிக்கப்பட்டதுடன், சுமார் 30 பேர் கொல்லப்பட்டனர்.



யுரேக்கா கொடி

இப் புரட்சியை முன்னின்று நடத்தியவர்களை தேச துரோகிகள் என்று குற்றம் சாட்டி விசாரணைக்கு ஆட்படுத்திய போது, ஜூரிகள் எவரும் இவர்களைத் தண்டிக்க முன்வரவில்லை. தவறு அரசினுடையதே என இராசாங்க ஆணையம் ஒன்று கண்டறிந்தது. தங்கம் அகழ்வோரது பல கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான அவர்களது விருப்பத்திற்கும் இசைவளிக்கப்பட்டது. ஒரு வருடத்திற்குள்ளாகவே, போராட்டக்காரர்களது தலைவரான Peter Lalor என்பவர் விக்டோரியப் பாராளுமன்றத்தின் உறுப்பினரானார்.

காலப் போக்கில், எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும், சகலரும் நியாயமாக நடத்தப்பட வேண்டும் எனும் கருத்திற்கும் இந்த யுரேகா போராட்டம் ஒரு சின்னமாயிற்று.

இந்தத் தங்க எழுச்சி அவுஸ்திரேலியாவைப் பல வழிகளிலும் மாற்றியமைத்தது. தங்க வேட்டைக்காக மக்கள் திரண்டு வந்த இந்த ஆண்டுகளில், 1851 இல் 43,000 ஆக இருந்த அவுஸ்திரேலியாவின் சனத்தொகை 1870 இல் 1.7 மில்லியனாக உயர்ந்தது. கூடிவரும் சனத்தொகைகளை இணைப்பதற்காக 1850-களில் முதல் இரயில்பாதைகளும், தந்தி தகவல் முறைகளும் நிறுவப்பட்டன.

தெற்கு அவுஸ்திரேலியா தவிர, அனைத்து குடியேற்றங்களிலும் பெருமளவில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பொருளாதாரம் வெகுவாய்ச் செழிப்படைந்தது, மற்றும் மிக முக்கியமான ஏற்றுமதிப் பொருளாய் இருந்த கம்பளியின் இடத்தைத் தங்கம் பெற்றது. 1890-ஆம் ஆண்டு வாக்கில் அவுஸ்திரேலிய மக்களது வாழ்க்கைத் தரம் உலகிலேயே மிக உயர்ந்ததாக இருந்தது என்று சொல்லலாம்.

## நில ஆக்கிரமிப்பாளர்களும் பண்ணையாளர்களும்

குடியேற்றங்களின் ஆரம்ப காலங்களிலிருந்தே, ‘அமர்வோர்’ (Skuatters) என அழைக்கப்படும் ஆக்கிரமிப்பாளர்கள் பரந்த நிலப்பகுதிகளை விவசாயத்திற்கெனக் கைப்பற்றியிருந்தனர். பொதுவாகவே, இந்த நிலத்தை இவர்கள் பணம் ஏதும் செலுத்தாமலேயே பெற்றார்கள் என்றாலும், இந்த அமர்வோர் இந்த நிலங்களைத் தமது சொந்த நிலங்களாகவே கருதினர். முதலாம் தங்க எழுச்சிக் காலங்கள் முடிவுற்ற பிறகு, ‘அமர்வோர்’ரிடமிருந்து இந்த நிலங்களைத் திரும்பப் பெற பெரும் போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

1860-களில், ‘அமர்வோ’ரது நிலங்களை தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் விவசாயத்திற்காகத் தர அரசு விரும்பியது. பல குத்தகை உரிமங்களைக் கோருவதன் மூலமாக, ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வளவு இயலுமோ அவ்வளவு நிலங்களை, பெரும்பாலும் நல்ல நிலங்களை, தம் வசம் வைத்துக்கொள்ள முயன்றனர்.

இரயில் பாதைகள் அமைக்கப்படும் வரையிலும் இந்தப் புதிய விவசாயிகள் கஷ்டங்கள் நிறைந்த சூழல்களைச் சந்தித்தனர். நகரங்களில் அதிக வேதனம் ஈட்ட இயலுமாயிருந்ததால், குறைந்த வேதனத்திற்கு நிலங்களில் வேலை செய்வது கவர்ச்சியற்றதாகத் தோன்றியது.


விவசாய முறைகளை எளிதாக்கும் இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் அவுஸ்திரேலியக் கலாசாரம் அங்கு தோன்றியது. உதாரணமாக, (1870-களில்) பயன்படுத்தப்பட்ட ‘ஸ்டம்ப்- ஜம்ப்’ எனும் கட்டை பாய்ச்சல் கலப்பை கரடு-முரடான நிலங்களை பயிர்ச்செய்கைக்காக துப்புரவு செய்வதை எளிதாக்கியது.

## 1800-களில் புலப்பெயர்வு

1800-களின் ஆரம்பத்தில் குடியேற்றக்காரர்கர்களில் பெரும்பாலானோர் ஆங்கிலேயர்களாகவும், ஸ்கொட், வேல்ஸ் மற்றும் அயர்லாந்துக் காரர்களாகவும் இருந்தனர். அவர்களது பாரம்பரியம் புதியதொரு தேசத்தின் அடிக்கலாய் அமைந்தது. அவுஸ்திரேலியாவின் பொழுதுபோக்கு முறைகள், கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் மதப் பழக்கவழக்கங்கள் என்பன ஐக்கிய இராஜ்ஜியத்தினதை ஒத்திருந்தன. ஐரோப்பா மற்றும் ஆசியாவிலிருந்து புலம்பெயர்ந்த சிறு குழுக்களும் இருந்தனர். 1800-களில் வந்த ஐரோப்பியர்களில், இத்தாலியர், கிரேக்கர், போலந்தினர், மோல்த்தியர், ரஷ்யர், மற்றும் மதுரச உற்பத்தித் தொழிலில் பணிபுரிந்த பிரான்சியர் ஆகியோர் அடங்குவர். இவர்களில் பெரும்பாலானோர் வேலையையும், செல்வத்தையும் நாடி வந்தோர், அல்லது தமது கப்பல்களை விட்டுத் தப்பியோடி வந்தவர்கள்.

1842-க்குப் பிறகு சீனக் குடிவரவாளர்கள் அவுஸ்திரேலியாவை வந்தடையத் துவங்கினர். தங்கக் கண்டுபிடிப்புக்குப் பிறகு இவர்களது எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அத்தடன் தங்க வயல்களில் இனப் பு+சல்கள் காணப்பட்டன. அவை 1854-ஆம் ஆண்டு Bendigo-வில் சீனர்களுக்கெதிராக ஏற்பட்டதைப் போன்ற கலவரங்களுக்கு சில சமயங்களில் இட்டுச்சென்றன. இனப் பூசல்கள் காரணமாக 1855-ஆம் ஆண்டில் விக்டோரியாவிலும், 1861-ல் நியூ சவுத் வேல்சிலும் புலப்பெயர்வுக் கட்டுப்பாடுகள் முதல் முறையாகக் கொண்டுவரப்பட்டன.

1850-களில் காணப்பட்ட தங்க எழுச்சிக் காலத்திற்குப் பிறகு, பெரும்பாலான சீனர்கள் தமது நாடு திரும்பினர். தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் வசிப்போருக்கு காய்கறிகளையும், பழங்களையும் எடுத்துச் செல்லும் சீன சந்தைத் தோட்டக்காரர்கள் இங்கேயே தங்கிவிட்டவர்களில் அடங்குவர்.


'ஆப்கன்' ஒட்டகம் ஒட்டுபவர்கள், அவுஸ்திரேலிய உள்ளகப் பகுதியில்

1860-களிலிருந்து அவுஸ்திரேலிய உள்ளகப் பகுதிகளுக்குள் ஒட்டகங்களை ஓட்டிச் செல்வதற்காக ஈரான், எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து மக்கள் வரத் துவங்கினர். இந்திய ஒட்டக ஓட்டிகளைப் போன்றே ஒரே உடையமைப்பையும், பொதுவான இஸ்லாமிய மத நம்பிக்கைகளும் கொண்டவர்களாக இவர்கள் இருந்தமையால், இவர்களும் 'ஆஃப்கானியர்' எனப் பொதுவாக அழைக்கப்பட்டனர். இந்த ஒட்டக ஓட்டிகளே அவுஸ்திரேலிய உள்ளகப் பிரதேசங்களின் முன்னோடிகளாய்க் கருதப்படுகின்றனர்.

இந்தியர்களும், பசுபிக் தீவுக்காரர்களும் குயின்சுலாந்திலுள்ள சர்க்கரை மற்றும் வாழைத் தோட்டங்களில் வேலை செய்துவந்தனர், அவர்கள் பெருமபாலும் மிகவும் குறைந்த சம்பளத்திலும், மிகவும் மோசமான சூழல்களிலும் இருந்தனர்.

1880-களிலிருந்து லெபனான் நாட்டு வேலையாட்கள் அவுஸ்திரேலியாவுக்கு வரத் தொடங்கினர். அநேக லெபனானியர் ஆடை மற்றும் துணி உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அவுஸ்திரேலியாவின் உட்புறங்களிலுள்ள பெருமளவு யன்னல் திரைச்சீலை தொழில்கள் லெபலானியக் குடும்பங்களுக்குச் சொந்தமானவையாக இன்றளவும் நீடித்து வருகின்றன.

## அபோரிஜினி மக்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகள்

அபோரிஜினி மக்களுக்கும், குடியேறிகளுக்கும் இடையே நடந்த நிலத்திற்கான ஆரம்பகால மோதல்கள் முடிவுற்ற பின்னர், அபோரிஜினி மக்கள் சமூகங்களின் விளிம்புகளில் வாழ்ந்து வந்தனர். உள்ளகப் பகுதிகளில் அமைந்திருந்த ஆடு மற்றும் மாட்டு நிறுத்தங்களில் சில அபோரிஜினி மக்கள் மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்து வந்தனர். அபோரிஜினி மக்களுக்கென குடியேற்ற அரசாங்கங்கள் ஒதுக்கியிருந்த பகுதிகளில் அபோரிஜினி மக்களால் வாழ முடிந்தது, ஆனால் தமது பாரம்பரிய வாழ்க்கையை வாழ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. உதாரணமாக, தாம் விரும்பியது போல வேட்டையாடவும், உணவைச் சேகரிக்கவும் அவர்களால் இயலவில்லை.

1800-களின் இறுதியில் அபோரிஜினி மக்களது உரிமைகளைக் குடியேற்றா அரசாங்கங்கள் பறித்தன. அபோரிஜினிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகள் எங்கே வாழலாம் மற்றும் யாரை மணம் செய்து கொள்ளலாம் என்பதையும் அரசுகள் தீர்மானித்தன. அத்துடன் அவை பல அபோரிஜினிக் குழந்தைகளை அவர்களது பெற்றோர்களிடமிருந்து பறித்து, அக்குழந்தைகளை 'வெள்ளை' குடும்பங்களுக்கு அல்லது அரசு அனாதை இல்லங்களுக்கு அனுப்பப்பட்டன. இது போன்ற கொள்கைகள் 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில் வரை தொடர்ந்து வந்தன. இத்தகைய 'திருடிய சந்ததிகள்' அனேக பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளுக்கும் மற்ற அவுஸ்திரேலியர்களுக்கும் ஆழமான சோகத்திற்கான காரணமாகவே தொடர்ந்து இருந்து வருகிறது, அதோடு இது 2008 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் தேசிய மன்னிப்பு கோருவதற்கான ஒரு பொருளாக இருந்தது.

## மகளிர் வாக்குரிமை

தேர்தல்களில் மகளிர் வாக்குரிமைக்கென உலகெங்கும் போராடிய பெண்கள் 'மகளிர் வாக்குரிமைப் போராளிகள்' ('Suffragettes') எனும் பதத்தினால் குறிப்பிடப்படுகின்றனர். 1880-களிலும், 1890-களிலும் ஒவ்வொரு குடியேற்றத்திலும் பெண்களது வாக்குரிமைக்காகப் போராடுகின்ற பிரிவினர் குறைந்தது ஒன்றாவது காணப்பட்டது. தமது குடியேற்றப் பாராளுமன்றங்களிடம் சமர்ப்பிப்பதற்கென பெண் வாக்குரிமைப் போராளிகள் மனுக்களில் ஆயிரக் கணக்கான கையெழுத்துக்களை வாங்கினர்.

தெற்கு அவுஸ்திரேலியப் பெண்கள் 1895-ஆம் ஆண்டு நடைபெற்ற பராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கும், தேர்தலில் போட்டியிடுவதற்குமான உரிமையை வென்றனர். மேற்கு அவுஸ்திரேலியப் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை 1899-ல் பெற்றனர்.

1902-ல், தேசப் பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கவும், போட்டியிடுவதற்குமான உரிமையை மகளிருக்கு வழங்கிய முதல் நாடு அவுஸ்திரேலியாவாகும். பூர்வீகக்குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவுவாசி மகளிருக்கும் வாக்களிக்கும் உரிமை 1962-ஆம் ஆண்டு வரைக்கும் வழங்கப்படவில்லை.

1923-ல் மேற்கு அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட Edith Cowan என்பவரே அம்மாநிலத்தின் முதலாவது மகளிர் பாராளுமன்ற உறுப்பினராவார். 1943-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட Enid Lyons என்பவர் அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணியாவார்.

## Catherine Spence (1825–1910)

Catherine Spence ஒரு எழுத்தாளரும், போதகரும், பெண்ணுரிமையாளரும் மற்றும் மகளிர் வாக்குரிமைப் போராளியுமாவார். ஸ்கொட்லந்திருந்து அவுஸ்திரேலியாவுக்கு கேத்தரின் ஸ்பென்ஸ் புலம் பெயர்ந்தார். அவுஸ்திரேலிய வாழ்க்கையைப் பற்றி இவர் எழுதிய புத்தகங்கள் பரிசுகள் வென்றுள்ளன. அத்துடன் இவர் பாடசாலைப் புத்தகங்களையும் எழுதினார்.

வீடற்ற குழந்தைகளுக்கென அமைப்பு ஒன்றை நிறுவ இவர் உதவினார், மற்றும் புதிய பாலர் பள்ளிகளுக்கும், சிறுமியருக்கான அரசு செகண்டரி பாடசாலைகளுக்கும் இவர் ஆதரவளித்தார்.

பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்ட முதல் பெண்ணாவார். இவர் அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் வெற்றியடையவில்லை. 1891-ல் இவர் தெற்கு அவுஸ்திரேலியாவின் 'மகளிர் வாக்குரிமை அமைப்'பின் துணைத் தலைவரானார்.

ஒரு பெண்ணால் என்னவெல்லாம் சாதிக்க இயலும் என்பதற்கு கேத்தரின் ஸ்பென்ஸ் ஒரு உதாரணமாக அமைகிறார்.



## கூட்டரசு

குடியேற்றங்கள் தனித்தனியே வளர்ந்த போதிலும், 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அனைவரும் ஒரே தேசத்தவர் எனும் பொதுக்கருத்து ஒன்று உருவாகியிருந்தது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதி வாக்கில், இக்குடியேற்றங்களை ஒன்றிணைக்கும் இரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1889-ல் Sir Henry Parkes அவர்கள் புதிய வலுவான ஒரே நாடு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரினார். 'அவுஸ்திரேலியக் கூட்டரசு' எனும் கருத்து பற்றிக் கலந்துரையாடும் பொருட்டு 'அவுஸ்திரேலாசிய கூட்டிணைப்புக் கருத்தரங்கு' 1890 இல் நடத்தப்பட்டது.

சில தாமதங்களுக்குப் பின்னர், 1893 இல் கூட்டிணைப்பு முயற்சிகளில் வேகம் ஏற்பட்டது. அடுத்த அரசியல் சாசன மாநாட்டிற்கான உறுப்பினர்களை வாக்காளர்கள் தெரிவு செய்தனர். இரு கட்டங்களில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் வாக்களித்த வாக்காளர்கள் அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியா தன்னைத் தானே ஆட்சி செய்து கொள்ளலாம் என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக்கொண்டது. இதைத் தொடர்ந்து 1901-ஆம் ஆண்டு, சனவரி 1-ஆம் திகதி Edmund Barton நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கூட்டரசு முயற்சிகளை முன்னின்று நடத்தி புதிய தேசத்தின் முதலாவது பிரதம மந்திரியானார். அவரது அரசாங்கம் சிட்னி நகரில் உள்ள நூற்றாண்டு விழா பூங்காவில் பாரியதொரு மக்கள் திரளுக்கு முன்பாக சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டது.

இப்போது ஆஸ்திரேலியா பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்குள் ஒரு தேசமாக இருந்தது. பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் 1931 வரையிலும் அவுஸ்திரேலியாவிற்கு முழு அதிகாரம் கிடைக்கவில்லை. 1948 ஆம் ஆண்டின் அவுஸ்திரேலிய குடியுரிமைச் சட்டம் வரைக்கும், அவுஸ்திரேலியர்கள் அப்போதும், அவுஸ்திரேலியக் குடிமக்களாக இருப்பதை விட, பிரிட்டிஷ் குடிமக்களாகவே இருந்தார்கள். தேசிய உணர்வு வளர்ந்திருந்தாலும், நாம் இன்னும் பிரித்தானியர்களே எனும் கருத்து மக்களிடையே வலுவாயிருந்தது.



பிரிஸ்பேனில் கூட்டமைப்பு தினம், 1901

**Edith Cowan (1861–1932)**

எடித் கோவன் அவர்கள் தான், அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற முதல் பெண்மணியாவார், அதோடு இவரது படம் அவுஸ்திரேலியாவின் ஐம்பது டாலர் நோட்டில் இடம்பெற்றிருக்கிறது.

எடித் அவர்கள், பெண்களின் வாக்குரிமை இயக்கத்தில் முன்னோடியாவார், அதோடு இவர் பொதுக்கல்வி மற்றும் குழந்தைகளின் உரிமைகள் ஆகியவற்றுக்கு வாதாடுவதில் முன்னோடியானவராவார். எடித் அவர்களை, 1915 ஆம் ஆண்டில் ஒரு மாவட்ட நீதிபதியாகவும், 1920 ஆம் ஆண்டில் சமாதான நீதிபதியாகவும், நியமனம் பெற்றார். 9121 ஆம் ஆண்டில், எடித் அவர்களை, மேற்கு அவுஸ்திரேலியாவின் சட்ட மன்றத்திற்கு, தேசியக் கட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள்.



## அரசியல் கட்சிகளின் தோற்றம்

1880-களில், அவுஸ்திரேலியத் தொழிலாளர்கள் வலுவான தொழிற் சங்கங்களை ஏற்படுத்தியிருந்தனர். பொருளாதாரத் தேக்கம் மற்றும் வரட்சி போன்ற இன்னல் மிக்க காலங்களில் தமது வேதனங்களையும், வேலை சூழ்நிலைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கென இத்தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தங்களை மேற்கொண்டன.

இதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் அரசியல் பக்கம் திரும்பினர். 1891 இல் இவர்கள் தொழிலாளர் கட்சியை உருவாக்கினர். தொழிலாளர்களது வேதனங்களையும், அவர்களது வேலைச் சூழ்நிலைகளையும் மீளப் பெற்று அவற்றை மேம்படுத்துவதே தொழிலாளர் கட்சியின் முதல் வேலையாய் அமைந்தது. மத்திய வகுப்பைச் சார்ந்த மக்கள் தொழிலாளரைக் காட்டிலும் வசதியாய் வாழ்ந்த போதிலும் தொழிலாளர்களது சூழ்நிலைகளை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சம்பளங்களை நிர்ணயிக்கவும், வேலை நிறுத்தங்களைத் தவிர்க்கவுமென அதிகாரபூர்வ அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஒரு தொழிலாளியும், அவரது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளும் 'கணிசமான' வசதியில் வாழ வழி செய்யும் வகையில் குறைந்த பட்ச ஊதியமாக ஒரு தொகையை 'பொதுநல அரசின் சமரசப் பேச்சுவார்த்தை நீதிமன்றம்' 1907 இல் நிர்ணயித்தது.

1910 இல், சுதந்திரக் கட்சியின் முதல் அத்தியாயம் உருவானது. ஆண்டுகள் செல்லச் செல்ல இந்தக் கட்சிக்கு அனேகப் பெயர்கள் இருந்தன, அதில் தேசியவாதக் கட்சி, மற்றும் ஐக்கிய அவுஸ்திரேலியக் கட்சி ஆகியவை அடங்கும். நாம் இன்று அறியும் லிபரல் கட்சி 1944-ஆம் ஆண்டு Robert Menzies அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது, அவர் தான் அவுஸ்திரேலியாவில் நீண்ட நாட்கள் பதவியில் இருந்த பிரதமரானார்.

முதலாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு விவசாயிகளது நலனை மேம்படுத்துவதற்கென 'கன்ட்ரி பார்ட்டி' எனும் கட்சி அமைக்கப்பட்டது. தேசியக்கட்சி என இப்போது அழைக்கப்படும் இக்கட்சி பொதுவாக லிபரல் கட்சியுடன் சேர்ந்து செயல்படுகிறது.

## 1901 இன் குடிவரவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1901 இல் குடிவரவு கட்டுப்பாட்டுச் சட்டம் அமுலுக்கு வந்த போது 'வெள்ளை அவுஸ்திரேலிய'க் கொள்கை சட்டமானது. புலம்பெயர்ந்து வந்தவர்கள் அவுஸ்திரேலியாவில் வேலை செய்வதையும், 'வெள்ளையர் அல்லாதோர்' புலம்பெயர்ந்து வருவதையும் இச்சட்டம் கட்டுப்படுத்தியது.

ஐரோப்பியர் அல்லாத பின்னணியிலிருந்து வரும் எவரும், ஐரோப்பிய மொழி ஒன்றில் 50 வார்த்தைகளைக் கொண்ட 'கேட்டுச் சொல் எழுதும் பரீட்சை' ஒன்றிற்குத் தோற்ற வேண்டியிருந்தது. சீன வணிக அமைப்பின் உறுப்பினர்கள், சட்ட நிபுணர் William Ah Ket மற்றும் முன்னணி சீன தொழிலதிபர்கள் ஆகியோர் பகிரங்க எதிர்ப்புத் தெரிவித்தனர், ஆனால் இவற்றால் இச்சட்டத்தை மாற்ற இயலவில்லை.

ஐரோப்பாவிலிருந்து வந்த குடிவரவாளர்களில் பெரும்பான்மையோர் புதிதாக அமைந்த அவுஸ்திரேலியாவில் இருந்தனர். ஆயினும், சீனர்கள், இந்தியர்கள், பசிபிக் தீவுவாசிகள் மற்றும் மத்தியக் கிழக்கிலிருந்து வந்தவர்களின் கலாச்சாரப் பங்களிப்புகள், ஏற்கெனவே அவுஸ்திரேலியாவின் சமுதாய அடையாளத்தின் ஒரு அங்கமாக இருந்தன.

## டோரதியா மெக்கல்லர் (1885-1968)

டோரதியா மெக்கல்லர் அவர்கள், என்னுடைய நாடு என்ற அவரது பாடலுக்கு மிகவும் பெயர்பெற்றவராவார், இது முதலில் 1908 ஆம் ஆண்டில் பிரசுரம் பெற்றது, அதில் உள்ள ‘வெயிலில் வெந்த என் நாட்டை நான் நேசிக்கிறேன்’ என்ற வரிகள் அழியாப் புகழ்பெற்றதாகும். அவரது பாடலை, மிகச்சிறந்த முட்புதர்ப் பாடல் என்றே கருதுகிறார்கள், இது வட-மேற்கு நியூ சவுத் வேல்ஸின், குன்னேடா அருகில் உள்ள அவரது சகோதரர்களின் பண்ணைகளில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தல் உத்வேகம் பெற்றதாகும்.

1968 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலிய இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக, டோரதியா அவர்களை, பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சியில் ஒரு அதிகாரியாக நியமித்தார்கள்.



## முதல் உலக மகா யுத்தம், 1914 - 1918

குடியேறிகளுக்கும், அபோரிஜினி மக்களுக்கும் இடையே ஏற்பட்ட சிறுசிறு மோதல்களைத் தவிர, அவுஸ்திரேலியா ஒரு வியக்கத்தக்க சாந்தமான நாடாக இருந்துவந்துள்ளது. உள்நாட்டுப் போர்கள் அல்லது புரட்சிகள் என்று எதுவும் இங்கு நடந்ததில்லை.

இங்கு வந்த முதல் குடியேறிகள் பிரிட்டிஷ் பேரரசுக்கு மிக விசுவாசமாய் இருந்தனர்.

இருந்தாலும், குறிப்பாக ஜப்பான் ஒரு வல்லரசாக ஆன பிறகு, ஆசியாவிற்கு அருகிலுள்ள ஐரோப்பியக் காவல் முகாம் என்ற முறையில் அவுஸ்திரேலியா தான் தாக்கப்படக்கூடுமான நிலையில் இருப்பதாக உணர்ந்தது. நம்மைப் பாதுகாப்பதற்கு பிரிட்டிஷ் பேரரசையும், அதன் கடற்படையையும் அவுஸ்திரேலியா சார்ந்திருக்க வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் பேரரசுக்கு பக்கபலமாகவும், நமது பாதுகாப்புக்காகவும் இரண்டு உலக மகாயுத்தங்களிலும் அவுஸ்திரேலியா போரிட்டது.

ஜெர்மானியருடன் கூட்டு சேர்ந்திருந்த துருக்கியின் மீது தாக்குதல் ஒன்றை நடத்தியதன் மூலம் அவுஸ்திரேலியாவின் இராணுவ வீரர்கள் முதல் உலக மகா யுத்தத்தில் 1915 இல் நுழைந்தனர். அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து வீரர்கள் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த கலிப்பொலி தீபகர்ப்பப் பகுதியைத் தாக்க வேண்டியிருந்தது.

இந்த வீரர்கள் துருக்கியப் படைகளின் துப்பாக்கிச் சூட்டையும் மீறி, செங்குத்தான மலைப் பாறைகள் மீது ஏற வேண்டியிருந்தது. எப்படியோ, இந்த மலைகளின் மீது ஏறிய வீரர்கள் குழிகளைத் தோண்டி அதில் மறைந்திருந்தனர். இதில் பல இளம் வீரர்கள் உயிரிழந்தனர். இந்த ஆன்ஸக் வீரர்களது துணிவில் அவுஸ்திரேலியர்கள் அதீதப் பெருமிதம் கொண்டனர்.

கலிப்பொலிக்குப் பிறகு அவுஸ்திரேலியத் துருப்புக்கள் மேற்குப் போர் முனையில் பிரான்சில் போரிட்டன. பதுங்கு குழிகளைத் தோண்டியமைக்க இவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் இங்கு இவர்களுக்கு ‘தோண்டிகள்’ (‘diggers’) எனும் பெயர் வழங்கப்பட்டது. General Sir John Monash எனும் இராணுவ தளபதியால் வழி நடத்தப்பட்ட அவுஸ்திரேலியத் தோண்டிகள் ஜெர்மானிக்கு எதிரான கடைசி போர்களில் பெரும் வெற்றிகளைக் கண்டனர்.

சூயஸ் கால்வாய் பாதுகாப்புப் பணிகளிலும், சினாய் தீபகற்பப் பகுதியை ‘கூட்டுப்படையினர்’ கைப்பற்றியதிலும் பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர்களும் வீர மகளிரும் மத்திய கிழக்குப் பகுதியிலும் சேவை புரிந்தனர்.

### சிம்ப்ஸனும் அவரது கழுதையும்—John Simpson Kirkpatrick (1892–1915)

பிரைவேட் ஜான் சிம்ப்ஸன் கலிப்பொலியில் மருத்துவப் பிரிவில் அவசர சிகிச்சை வாகனப் படுக்கை தூக்கியாகப் பணியாற்றி வந்தார். இங்குள்ள மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகள் வழியாக இப்படுக்கைகளைத் தூக்கிச் செல்வது மிகக் கடினமாக இருந்தது. இராணுவ உத்தரவுகளையும் மீறி, Duffy எனும் பெயரைக் கொண்ட கழுதையின் மீது காயமுற்ற வீரர்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுவர இவர் உதவினார்.

பகல் இரவாக இடைவெளி ஏதுமின்றி, போர்முனைக்கும், கடற்கரையிலுள்ள தமது முகாமுக்கும் தமது உயிரைப் பணயம் வைத்து இவர்கள் பயணித்தனர்.

பிரைவேட் ஜான் சிம்ப்ஸன் கலிப்பொலிக்கு 1915, ஏப்ரல் 25-ஆம் திகதியன்று வந்துசேர்ந்தார். வெறும் நான்கு வாரங்களுக்குப் பின்னர் எதிரிகளின் இயந்திரத் துப்பாக்கிச் சூட்டில் இவர் கொல்லப்பட்டார். பிரைவேட் ஜான் சிம்ப்ஸன் துணையாக வராமல், Duffy மட்டும் காயமுற்றிருந்த வீரர் ஒருவரைச் சுமந்து கொண்டு தனியே கடற்கரை முகாமிற்கு வந்த சோகம் மிக்க காட்சியை இராணுவ வீரர்கள் கண்டனர். John Simpson Kirkpatrick ஒரு அவுஸ்திரேலிய அமர காவியமாவார்.





# ஆன்ஸாக் அமரகாவியம்

துருக்கியில் இருக்கிற கலிப்பொலியில் தான் ஆன்சக் பாரம்பரியம் அமையப்பெற்றது.

ஏப்ரல் 25, 1915 ஆம் ஆண்டு கல்லிபோலியில் இறங்கியது, எட்டு மாதங்கள் நீடித்த போர்க்கால நடவடிக்கையின் துவக்க நாளாகும், 26000 அவுஸ்திரேலிய போர் வீரர்கள் இதில் பாதிப்புக்குள்ளாயினர், இவர்களில் காயங்களாலும் அல்லது நோய்களாலும் மடிந்த 8000 வீரர்களும் அடங்குவர். கலிப்பொலி தீபகற்பத்தில் போரிட்டோரது தைரியமும், வீர உணர்வும் ஒரு அமரகாவியத்திற்கே வடிவளித்தது என்று கூறலாம். 'ஆன்ஸக்' எனும் பதம் அவுஸ்திரேலிய, நியுசிலாந்து மொழிவழக்கின் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது.

கலிப்பொலியில் தரையிறங்கிய நிகழ்வை முதல் முறையாக 1916-ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் உள்ள துருப்புக்கள் நினைவு கூர்ந்தன. அந்த ஆண்டுதான், ஏப்ரல் 25-க்கு 'ஆன்ஸக் தினம்' எனப் பெயரிடப்பட்டது. அன்றிலிருந்து, 25 ஏப்ரல் அன்ஸக் தினம் என்றறியப்படுகிறது.

1920-களில் அவுஸ்திரேலியா எங்கும் 'ஆன்சக் தின' சடங்குகள் நடத்தப்பட்டன. மாநிலங்களில் 'ஆன்சக் தினம்' பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. தலைநகர்களில் பிரதானமான போர் நினைவாலயங்கள் நிறுவப்பட்டன.

தேசம் நெடுக உள்ள பெருநகரங்களிலும் சிறுநகரங்களிலும், போர்களில் இறந்த இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நினைவுக்கூடங்கள் எழுப்பப்பட்டன.

யுத்தங்களிலும், போர்களிலும், அமைதி காக்கும் பணிகளிலும் சேவை புரிந்த அனைவரையும், கடும் பகையின் முகத்திலும் அவர்களது தோழமையையும், சகிப்புத்தன்மையையும், நமது எதிர்காலத்திற்கான தியாகங்களையும் கௌரவிக்கும் தினமாக 'ஆன்சக் தினம்' தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. அதோடு இது போரின் அனேக வித்தியாசமான அர்த்தங்களைப் பிரதிபலிக்கும் ஒரு தினமாகும்.

இன்று, அவுஸ்திரேலியாவிலும் மற்றும் உலகெங்கும் 'ஆன்சக் தினம்' அனுஷ்டிக்கப்படுகிறது. சண்டைகளிலும் போரிட்ட வீரர்களும், வீராங்கனைகளும், ஒருங்கிணைந்து போரிட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்களும், அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபட்டோரும் 'ஆன்சக் தின' அணிவகுப்புக்களில் பெருமிதத்துடன் நடைபோடுகின்றனர்.

## தேக்க காலம், 1929 – 1932

இந்தப் பெரும் பொருளாதாரத் தேக்க காலமானது அவுஸ்திரேலிய மக்களுக்குக் கடும் இன்னல் மிக்க காலமாயிருந்தது. நியூயார்க் நகர பங்குச் சந்தை வீழ்ந்த அதே நேரத்தில் இது ஆரம்பமானது என்றாலும், இத்தேக்க நிலைக்குக் காரணமாய் அமைந்த வேறு கூறுகளும் உண்டு. ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் மற்றும் விற்பனைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, வெளிநாட்டுக் கடன், அரசின் செலவினம் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவையும் காரணங்களில் உள்ளடங்கும். 1932 இன் மத்தியில் கிட்டத்தட்ட 32 சத அவுஸ்திரேலியர்கள் வேலையில்லாமல் இருந்தனர்.

அவுஸ்திரேலிய சமூகத்தின் மீது இத்தேக்க நிலை பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது: வேலையும், நிலையான வருமானமும் இல்லாத காரணத்தால் பலர் தமது வீடுகளை இழந்தனர். சுகாதார வசதிகள் அற்ற தற்காலிகக் கொட்டைகளில் இவர்கள் வாழும் நிர்பந்தம் ஏற்பட்டது. சில தந்தையர்கள் தமது குடும்பத்தினரை நிர்கதியாய் விட்டுச் சென்றனர் அல்லது குடிப்பழக்கத்திற்கு அடிமையாயினர். தொழிலாளர் குடும்பத்துக் குழந்தைகள் 13 அல்லது 14 வயதில் பாடசாலையை விட்டு அகல ஆரம்பித்தனர். அநேகப் பெண்கள் பிரதான வருமானம் ஈட்டுபவர்களாக இருந்தது மட்டுமின்றி, குழந்தைகளையும், வீட்டையும் யாருடைய உதவியுமின்றித் தாமாகவே கவனிக்க வேண்டியிருந்தது.

பொருளாதாரத் தேக்கநிலை ஏற்படுவதற்கு முன்பாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தில் வேலையற்றோருக்கு உதவும் மத்திய திட்டம் எதுவும் கிடையாது. தரும ஸ்தாபனங்கள் மற்றும் சில தனியார் அமைப்புகள் ஆகியன தவிர, வேலைவாய்ப்புத் திட்டங்களையும், பொதுப் பணித் திட்டங்களையுமே ஏழை மக்கள் நம்பியிருக்க வேண்டியிருந்தது. 1932-ல் பொருளாதார நிலை முன்னேற ஆரம்பித்தது, ஆனால், பெரும்பான்மைத் தருணங்களில், குடும்பங்களுக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பை சரி செய்ய இயலவில்லை.


பெரும் நெருக்கடியின் போது ஒரு இரச் அடிப்படி

இந்த பெருந் தேக்க காலத்தின் போது அவுஸ்திரேலிய தரும ஸ்தாபனங்களும், சுவிருப்புத் தொண்டர்களும் பெரும் பங்காற்றினர்.

## Sir Charles Kingsford Smith (1897–1935)

Sir Charles Kingsford Smith (1897–1935) துணிவு மிக்க ஒரு விமான ஓட்டியும், விண்ணூர்திப் பயண முன்னோடியும், ஒரு அவுஸ்திரேலிய ஹீரோவும் ஆவார். முதலாம் உலக மகா யுத்தத்தில் கலிப்பொலியில் போரிட்ட சர் சார்லஸ் கிங்ஃபர்ட் ஸ்மித் பிரித்தானியரின் 'ராயல் ஃப்ளையிங் கோர்' விமானங்களை ஓட்டி வந்தார்.

1928 இல், கலிஃபோர்னியாவிலிருந்து குயீன்சுலாந்து வரை பசிபிக் மகாசமுத்திரத்தை முதல் முறையாய்க் கடந்தது இவரது மிகப் பெரும் சாதனையாகும். 'சதர்ன் கிராஸ்' என்ற அவரது விமானம் இறுதியாக அவுஸ்திரேலியாவை வந்தடைந்த போது அவர் மீது அமோக அன்பு வைத்திருந்த 25,000 மக்கள் ஹீரோ 'ஸ்மைதி'க்குப் புகழாரம் சூட்டக் காத்திருந்தனர். அவரது விண் பயண சேவைகளுக்கென 1932 இல் 'சர்' பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

துயரகரமான வகையில், 1935-ல் இங்கிலாந்திலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு வரும் வழியில் அவரது விமானம் விபத்துக்குள்ளானது , அதனையடுத்து அவர் கண்டுபிடிக்கப்படவேயில்லை.

உலகின் மிகச் சிறந்த விமானி என்று அழைக்கப்பட்டுள்ள சர் சார்லஸ் கிங்ஃபோர்டு ஸ்மித், தேக்க காலத்தின் மத்தியிலுங்கூட மற்றவர்களுக்கு உதாரணமாக இருந்த ஒரு உண்மையான அவுஸ்திரேலிய நாயகனாக விளங்கினார்.




## இரண்டாம் உலக மகாயுத்தம் 1939 -1945

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது வட ஆப்பிரிக்கப் பாலைவனங்களிலும், இதர பல இடங்களிலும் கூட்டணி நாடுகளோடு சேர்ந்து ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு எதிராகவும், மத்தியதரைக்கடல் மற்றும் வடக்கு ஆப்ரிக்காவிர்கு எதிராகவும் அவுஸ்திரேலியர்கள் போரிட்டனர். இவர்கள், தென் –கிழக்கு ஆசியாவிலும், பசிபிக்கிலும் ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டனர்.

வட ஆப்பிரிக்க பாலைவனங்களில், தொப்ருக் நகரில் ஜெர்மானியரும், இத்தாலியரும் இட்டிருந்த, எகிப்தில் ஜெர்மானிய படைக்குக் எதிரான கடைசி அரணாக இருந்த, நீண்டதொரு முற்றுகையை முறியடிக்க இவர்கள் போரிட்டனர். எட்டு மாதங்களாக, இந்த ஆட்கள் (பெரும்பாலும் அவுஸ்திரேலியர்கள்) கடும் தாக்குதல்களையும், கடுமையான சூழ்னிலைகளையும் தாங்கி, குகைகளிலும், இடுக்குகளிலும் வாழ்ந்து வந்தனர். போரின் ஒருசில இருண்ட நாட்களின் போது, அவர்களது தீர்மானம், வீரதீரம், நகைச்சுவையோடு கூடிய, அவர்களது படைத்தளபதிகளின் தீவிர தந்திரங்களுமே மனதை மயக்கும் மூலாதாரமாக ஆகின. அப்படிச் செய்கையில், இவர்கள் ‘தொப்ருக் எலிகள்’ என்ற அழியாப் புகழைப் பெற்றார்கள்.

1941 ஆம் ஆண்டில், பசிபிக்கில் ஜப்பான் தனது போரைத் துவங்கியது. அவுஸ்திரேலியப் படைவீரர்களும், வீராங்கனைகளும் பப்புவா நியூ கினியைத் தாக்குதலிலிருந்து காக்கச் சென்றார்கள். இந்தப் பணி சாதாரண சிப்பாய்களிடமும், மிகவும் குறைந்த பயிற்சி பெற்ற புது இளம் சிப்பாய்களிடமு ஒப்படைக்கப்பட்டது. ‘கொகோடா பாதை’ எனப்படும் சகதி நிறைந்த, செங்குத்தான காட்டுப் பாதை நெடுக இவர்கள் எதிரியுடன் போரிட்டனர். ஜப்பானியப் படைகளின் முன்னேற்றத்தை அவுஸ்திரேலியத் துருப்புக்கள் தடுத்து நிறுத்தின. கலிப்பொலியின் ஆன்சக் குடாவோடு கொகாடு பாதையும் அவுஸ்திரேலியர் பலர் விஜயம் செய்யும் புண்ணியத் தளமானது.



கொக்காடா பாதையில் காயமடைந்த போர் வீரர் ஒருவருக்கு பப்புவா சுமை தாங்கி உதவுவது

சிங்கப்பூலிருந்த பாரிய பிரித்தானியத் தளத்தை 1942-ல் ஜப்பானியர் கைப்பற்றினார்கள். எதிரிகளிடம் பிடிபட்டு தாய் - பர்மா இரயில் பாதை அமைக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டவர்களில் 15,000 அவுஸ்திரேலியத் துருப்புக்களும் அடங்குவர். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானியர்கள் அவுஸ்திரேலிய துருப்புக்களைக் கொடூரமாக நடத்தினார்கள். தம்மால் இயன்ற வரையிலும் அவுஸ்திரேலியப் போர்க்கைதிகள் ஒருவருக்கொருவர் உதவிகரமாக இருந்த போதிலும், இங்கு தான் 2700 அவுஸ்திரேலிய போர்க்கைதிகள் மாண்டனர்.

### Sir Edward ‘Weary’ Dunlop (1907–93)

Sir Edward ‘Weary’ Dunlop துணிவும், கருணையும் மிக்கதொரு அறுவை சிகிச்சை மருத்துவரும், அவுஸ்திரேலியப் போர்க் கால நாயகனும் ஆவார். ஜப்பானியரால் பிடிபட்ட இவரும் இவரது சகாக்களும் தாய் - பர்மா இரயில் பாதை வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்காக பர்மாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இது மிகநீண்ட கடும் வேலையாகும்.

தளபதி எனும் முறையில் வியரி தனது வீரர்களுக்காக் குரல் கொடுத்தார் மற்றும் அவர்களைக் குணப்படுத்துவதிலும் நீண்ட நேரம் செலவிட்டார். இவர் முகாமில் வதைக்கு ஆளாக்கப்பட்ட போதிலும், அடிபணியாது தொடர்ந்து தமது பணியை ஆற்றி வந்தார்.

மருத்துவத் துறைக்குத் இவர் செய்த பங்களிப்புக்காக 1969-ஆம் ஆண்டு இவருக்கு ‘சர்’ பட்டம் வழங்கப்பட்டது. இவர் இறந்த போது 10,000 மக்கள் மெல்பர்ன் நகரத் தெருவோரங்களில் நின்று, ‘இரயில் பாதை மருத்துவர்’ என்று தாம் அன்பாய் அழைத்த நாயகனின் இறுதி யாத்திரையில் மரியாதை செலுத்தினர்.



## மற்ற சண்டைகள்

இரண்டாம் உலகப்போரை அடுத்து விரைவிலேயே, 1950 முதல் 1953 வரை, ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுப் படையின் ஒரு பகுதியாக, அவுஸ்திரேலிய ஆயுதப்படைகளை, வடக்கின் கம்யூனிசப் படைகளில் இருந்து தற்காப்பதற்காகத் தென்கொரியாவிற்கு அனுப்பி வைத்தனர்.

வெகு காலம் பிடிக்கும் முன்பே, நாட்டை மறுபடியும் ஒன்றாக்க விரும்பிய, வியட்னாமிய கம்யூனிசப் படைகளுக்கு எதிராக தெற்கு வியாட்னாமிய அரசாங்கத்திற்கு ஆதரவாக அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு அவுஸ்திரேலியா கூட்டு சேர்ந்தது. இரண்டாம் உலகப்போரில் இருந்து, வியாட்னாம் போரே, அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய ஆயுதமேந்திய படைப் பணியாக இருந்து வருகிறது. 1962 இல் ஆரம்பித்து 1973 ஆம் ஆண்டு வரை நீடித்த இந்தப் போர், அந்தக் காலத்தில், அவுஸ்திரேலியா போரிட்ட மிக நீண்ட போராகவே இருந்தது. இது ஒரு முரண்பாடான ஈடுபாடாக இருந்தது, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, குறிப்பாக, இளம் அவுஸ்திரேலிய ஆண்களைக் கட்டாயப் பணியில் ஈடுபடுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அனேக அவுஸ்திரேலியர்கள் தெருவில் இறங்கிப் போரிட்டனர்.

அவுஸ்திரேலியப் பாதுகாப்புப் படை, கிழக்கு தைமார், ஈராக், சூடான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சண்டைகளிலும் ஈடுபட்டிருந்தது, அதோடு, ஆப்ரிக்கா, மத்தியக் கிழக்குக் மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்தியம் உள்ளிட்ட, உலகின் அனேகப் பகுதிகளில் அமைதி காக்கும் பணிகளில் ஐக்கிய நாடுகளிலும் பங்கேற்றிருக்கிறது.

## நினைவஞ்சலி நாள்

ஆன்சக் தின சடங்குகளைப் போலவே, நினைவஞ்சலி தினத்தன்றும் யுத்தத்தில் போரிட்டு உயிர் நீத்தோரை அவுஸ்திரேலியர்கள் நினைவு கூருகின்றனர். ஒவ்வொரு வருடமும், நவம்பர் மாதம் (11-வது மாதம்) 11-ஆம் திகதி 11 மணிக்கு போர்கள், மற்றும் மோதல்களில் உயிர் நீத்த அல்லது அல்லலுற்ற ஆடவரையும், மகளிரையும் மற்றும் யுத்தங்களில் சேவை புரிந்த அனைவரது தியாகங்களையும் அவுஸ்திரேலியர்கள் ஒரு கணம் நின்று நினைவு கூருகின்றனர். இத்தினத்தன்று நாம் செம்மை நிற பொப்பி மலர் ஒன்றைச் சூடிக் கொள்கிறோம்.

# 1900-ங்களின் ஆரம்பகால புலம்பெயர்வு


ஐரோப்பியக் குடிவரவாளர் ஒரு வர் அவுஸ்திரேலியாவிற்கு வந்து சேருதல்

முதல் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்திலும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவது குறித்த கடுமையான வரைமுறைகள் நடப்பில் இருந்தன. எனினும், ஐரோப்பாவின் தென் பகுதியிலிருந்து புலம்யெர்வோரில், குறிப்பாய் ஆடவரது வருகையில் அதிகரிப்பு காணப்பட்டது. பல வகைப்பட்ட திறன்களையும், கல்வியறிவையும் தமது கலாசார விழுமியங்களையும் இவர்கள் தம்முடன் கொணர்ந்தனர். அவுஸ்திரேலியாவின் கிராமியத் தொழில் அபிவிருத்திக்கும், சாலைகள் மற்றும் இரயில் பாதைகளை அமைக்கவும் இவர்கள் உதவினர். திறன் மிக்க இத்தாலியக் கொத்தனார்கள் நமது அரசாங்கக் கட்டிடங்கள் மற்றும் வதிவிடங்களை நிர்மாணிக்கக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தனர்.

1930-களின் முடிவில், யுத்த அகதியர்கள் ஐரோப்பாவிலிருந்து வரத் தொடங்கினர். ஜெர்மானிய நாஸிகளின் அச்சுறுத்திலில் இருந்து இவர்கள் தப்பியோடிக் கொண்டிருந்தனர். ஜெர்மனி, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் இருந்து இவர்கள் வந்தனர். இவர்களில் உயர் கல்வியும், திறனும் ஒருங்கே அமையப்பெற்ற பல அகதிகள் அவுஸ்திரேலியாவினது கலாசார வாழ்க்கைக்குப் பெரும் பங்களிப்பாற்றியுள்ளனர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது பிடிபட்ட 18000 இத்தாலிய இராணுவ வீரர்கள் அவுஸ்திரேலிய போர்க் கைதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குறுகிய காலம் மட்டுமே முகாம்களில் தங்கியிருந்தார்கள், இவர்கள் நியாயமான முறையில் நடத்தப்பட்டனர், அதில் அனேகர் இந்த மண்ணைக் குறித்தும், மக்களைக் குறித்தும் கொஞ்சம் தெரிந்து கொண்டார்கள். யுத்தத்திற்குப் பிறகு பலர் புலம்பெயர்ந்தோராக அவுஸ்திரேலியாவிற்குத் திரும்பினர்.

# யுத்த காலத்தைத் தொடர்ந்து வந்த அகதியர்

சனத்தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன், யுத்தத்திற்குப் பிறகு, மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து புலம்பெயர்வோரை அவுஸ்திரேலியா உள்ளெடுத்தது. நாஸி ஆதிக்க ஜெர்மனியிலிருந்து இலட்சக் கணக்கான மக்கள் தப்பியோட வேண்டியிருந்தது அல்லது சோவியத்து ருஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தமது சொந்த இடங்களுக்கு இவர்களால் திரும்ப இயலாமலிருந்தது. இடம் பெயர்த்தப்பட்ட இவர்களில் ஏறத்தாழ 170,000 பேரை ஏற்றுக்கொண்ட அவுஸ்திரேலியா புது வாழ்க்கை ஒன்றை ஆரம்பிக்கும் வாய்ப்பை இவர்களுக்கு வழங்கியது.

அவுஸ்திரேலியாவில் பெரும் தொழிலாளர் பற்றாக்குறையும் காணப்பட்டது. நாட்டின் எதிர்காலத்திற்கு சனத்தொகை வளர்ச்சி இன்றியமையாதது என அவுஸ்திரேலிய அரசு நம்பியது. 45 வருடங்களுக்குக் குறைந்த வயதுடைய ஆரோக்கியமான புலம்பெயர்வோர் வெறும் 10 பவுண்டு கட்டணத்திற்கு அவுஸ்திரேலியாவுக்கு வர இயலுமாயிருந்தது, மற்றும் இவர்களது பிள்ளைகளால் இனாமாய்ப் பயணிக்க இயலுமாயும் இருந்தது. ஆயினும், ஐக்கிய அரசு அல்லது ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தோர் மட்டுமே வர இயலும் என்ற கட்டுப்பாடு நீடித்தது.



# ஸ்நோவி மலை நீர்-மின் உற்பத்தித் திட்டம்

1949 ஆம் ஆண்டில், ஸ்நோவி ஆற்றின் தண்ணீர் கிழக்கு விக்டோரியாவில் கடலில் பாய்வதற்கு முன்பாக அதைப் பிடிக்கும் திடமான திட்டமொன்றை அரசு ஆரம்பித்தது. இத்தண்ணீரை நீர்பாசனத்திர்காக உள்நாட்டிற்குத் திருப்பி விடப்பட்டது, அதோடு அது மின்சக்தியை உற்பத்தி செய்யவும் உபயோகிக்கப்படவிருந்தது. இதுவொரு மாபெரும் திட்டமாகும், இதை நிறைவேற்ற 25 ஆண்டுகளானது.

இதுவே அவுஸ்திரேலியாவில் மேற்கொண்ட மிகப்பெரிய பொறியியல் திட்டமாகும். இது, உலகின் மிகப்பெரிய நீர்-மின்சாரத் திட்டங்களில் ஒன்றாகும், அதோடு இதை உலகின் நவீன கட்டுமானப் பொறியியல் அதிசயங்களில் ஒன்றாக அங்கீகரித்திருக்கிறார்கள்.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் Kosciusko தேசிய வனப்பூங்காவில் ஸ்நோவி மலைத் திட்டம் அமைந்துள்ளது. 16 பிரதான நீர்த் தேக்கங்களும், ஏழு மின்னுற்பத்தி நிலையங்களும், நீரேற்று நிலையம் ஒன்றும் 225 கிலோ மீட்டர் தொலைவு நீளும் குகைப் பாதைகளும், குழாய்வழிகளும், நீர்க்கால்வாய்களும் இத்திட்டத்தில் அடங்கும். பெரும்பகுதி நிலத்தடியில் அமைந்ததாகும்.

இத்திட்டம், நியூ சவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரியாவின் உள்ளகப் பகுதியின் பண்ணைகளுக்கு இன்றியமையாத தண்ணீரை வழங்குகிறது. இதன் மின் உற்பத்தி நிலையங்கள், நியூ சவுத் வேல்ஸ் மின்சாரத்தில் 10 சதவீத அளவை உற்பத்தி செய்கின்றன.

இச் செயற்றிட்டத்தின் வேலைகள் 1949-ல் தொடங்கி 1974-ல் முடிவுற்றன. 30 நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தில் வேலை செய்தனர். இத்தொழிலாளர்களில் 70 சதத்திற்கும் மேலானோர் புதிய குடியேறிகளாவர். இத்திட்டம் பூரணமடைந்த பின்னர் அவுஸ்திரேலியாவிலேயே தங்கிவிட்ட பெரும்பான்மை ஐரோப்பியத் தொழிலாளர்கள் இந்நாட்டினது பல்கலாசார சமுதாயத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளனர்.

அவுஸ்திரேலியா ஒரு சுதந்திர, பல்கலாசார, சாதுரியமான நாடு என்பதைக் காட்டும் பிரதான அடையாளச் சின்னமாக ஸ்நோவி மலைத் திட்டம் விளங்குகிறது.

## பூர்வீகக் குடிமக்கள் நடத்தப்பட்ட விதம்

அபோரிஜினி மக்களைப் பொறுத்த அவுஸ்திரேலிய அரசின் கொள்கையானது 1940-களிலும் 1950-களிலும் ஒருமைப்பாடுடையதாக மாறியது. இதன் அர்த்தம், பூர்வீகக் குடிமக்கள் அல்லாத ஏனைய மக்கள் வாழ்வது போலவே பூர்வீகக்குடியினரும் வாழ வேண்டும் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால், தமது பாரம்பரிய கலாசாரத்தை பூர்வீகக்குடியினர் இழக்க விரும்பாததால் இந்த கொள்கை பயனளிக்கவில்லை.

1960-களில் இக்கொள்கைத் திட்டம் ஒருங்கிணைப்புக் கொள்கையாக மாறியது. அவுஸ்திரேலியாவிலிருந்த பெரும்பாலான ஆண்கள் வாக்களிக்கும் உரிமையை 1850-களில் பெற்றனர், ஆனால், பொதுநல அரசு வாக்களிப்பு உரிமைகள் என்பது சகல பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்களுக்கும் 1962-ஆம் ஆண்டு வரையிலும் அளிக்கப்படவில்லை. பூர்வீகக் குடிமக்களுக்கு குடிவாழ் சுதந்திரங்கள் வழங்கப்பட்டபோதிலும் பூர்வீகக்குடி சாரா அவுஸ்திரேலியக் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்கள் எதிர்பார்க்கப்பட்டனர்.

1967-ஆம் ஆண்டில், அபோரிஜினிப் பூர்வீகக்குடிகளும் நாட்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென 90 வீதத்திற்கும் மேலான அவுஸ்திரேலியர்கள் 'ஆம்' என்று சொல்லி விருப்பம் தெரிவித்ததையடுத்து, மேலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கருத்துக்கணிப்பானது வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. பூர்வீகக் குடிமக்களும் உள்ளடக்கப்பட்டு, ஏனையோருக்கு அளிக்கப்படும் அதே உரிமைகள் இவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று பெரும்பான்மை அவுஸ்திரேலியர்கள் விரும்புகின்றனர் என்பதை இது காட்டியது.

இவ்வவுஸ்திரேலியத் திறந்த மனப்பாங்குகளும் அப்போதிருந்த அபோரிஜினிப் பூர்வீகக்குடிகளின் கடும் எதிர்ப்பும் 1970-களில் பூர்வீகக் குடிமக்களின் சுயநிர்ணயக் கொள்கைக்கு வழியமைத்தது. தமது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார வளர்ச்சியில் பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்களது விருப்பங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை அவுஸ்திரேலிய அரசு உணர்ந்து, ஏற்றுக்கொள்ளத் துவங்கியது.

நில உரிமைகள் மீதான போராட்டங்கள், வடக்குப் பிரதேசத்தில் Wave Hill பகுதியில், Gurindji போராட்டத்தை அடுத்து, 1960 ஆம் ஆண்டுகளில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. Vincent Lingiari தலைமையில் வந்த, பூர்வீகக் குடிகளின் மந்தையாட்கள், சம்பளம் மற்றும் வேலை நிலைமைகள் குறித்து எழுந்த போராட்டத்தில், மாட்டுப்பண்ணைகளை விட்டு வெளியேறினர். அவர்களது செயல், Eddie Mabo மற்றும் மற்றவர்கள் நில உரிமைகளுக்காகப் போராட வழி வகுத்தது.

1976 ஆம் ஆண்டின் பூர்வீகக் குடிகள் நில உரிமைகள் (வடக்குப் பிரதேசம்) சட்டத்தின் கீழ், பூர்வீகக் குடிகளுக்கு உள்ளக அவுஸ்திரேலியாவில் நிலப் பகுதிகள் கொடுக்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டுகளின் முன் பகுதியில், உயர் நீதிமன்றத்தின் Mabo முடிவும் *Native Title Act* 1993 சட்டமும், பூர்வீகக் குடிகளும், தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளும், அவர்களது சொந்தப் பாரம்பரிய சட்டங்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் பேரில் நிலத்தைக் கோரிப்பெறுவதற்கான உரிமை இருக்கிறது என்பதை அங்கீகரித்தன.

வரவர அதிகமாக அவுஸ்திரேலியாவில் சொந்த பத்திரத் தீர்மானங்கள் அடங்கியிருந்தன. இத்தகைய பகுதிகளில், பாரம்பரிய சமுதாயக் கோணங்கள் தொடர்ந்தன.

1997 ஆம் ஆண்டு மே மாதத்தில், அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில், 'வீட்டிற்கு அழைத்து வருதல்' அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை, பெரும் எண்ணிக்கையிலான பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவு வாசிகளின் குழந்தைகளை அவர்களது குடும்பங்களில் இருந்து அகற்றியதற்குள் செய்ததோர் விசாரணையின் விளைவேயாகும். இத்தகைய பிள்ளைகளை, 'திருடிய சந்ததிகள்' என்று அறியப்பட்டனர். இந்த அறிக்கையின் விளைவாக, 1998 ஆம் ஆண்டில் முதல் தேசிய 'மன்னிப்பு தினத்'தன்று, தங்களது உள்நாட்டு சொந்த அவுஸ்திரேலியர்களோடு ஒன்றாக நடைபயணம் மேற்கொண்டு, ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலியர்கள் தங்களது ஆதரவைக் காண்பித்தனர்.

## களவுபோன சந்ததியரிடம் கேட்கப்பட்ட மன்னிப்பு, 2008

2008-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம் 13-ஆம் திகதி அவுஸ்திரேலியப் பிரதம மந்திரி 'களவாடப்பட்ட சந்ததிய'ரிடம் தேசத்தின் சார்பாக அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் மன்னிப்பு கோரினார்.அனைத்து அவுஸ்திரேலியர்கள் சார்பாக இவர் உரையாற்றினார். கடந்த காலங்களில் பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்கள் நடத்தப்பட்ட விதத்திற்காக தனது வருத்தத்தினை இவர் தெரிவித்தார். குறிப்பாக, தமது பெற்றோரிடமிருந்து பூர்வீகக்குடிக் குழந்தைகள் பறிக்கப்பட்ட விதத்திற்காக இவர் மன்னிப்பு வேண்டினார்.


இவரது இந்த உரை வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களால் ஒளிஃஒலிபரப்பப்பட்டது. ஆயிரக் கணக்கான அவுஸ்திரேலியர்கள் பொது இடங்களிலும், தமது பணியிடங்களிலும் கூடி நின்று இந்த 'மன்னிப்பு' உரையாடலைச் செவிமடுத்தனர். கடந்தகால அநீதிகளை இந்த உரை அட்டவணையிட்டுக் காண்பித்து அவற்றிற்காக மன்னிப்பு கோரியது. பூர்வீகக்குடி மக்களது காயங்களை ஆற்றும் பணியிலும், இது போன்ற அநீதிகள் இனி எப்போதும் இழைக்கப்படமாட்டாது என உறுதிப்படுத்துவதிலும் இது ஒரு முக்கியமான படிக்கல்லாகும். அனைத்து அவுஸ்திரேலியரும் எடுத்து வைத்துள்ள முன்னேற்றக் காலடியாகும் இந்த மன்னிப்பு உரை.



வானத்தில் எழுதுபவர் 'மன்னிப்பு' என்பதை சிட்னியின் வானில் எழுதுகிறார்

அவுஸ்திரேலிய அடையாளத்திற்கு பூர்வீகக்குடி மக்கள் ஆற்றியுள்ள பங்களிப்பினை அங்கீகரித்து அது குறித்து நாமனைவரும் இன்று பெருமிதம் கொள்கிறோம். நீதித்துறை, அரசியல், கலைகள் மற்றும் விளையாட்டுகள் உட்பட அவுஸ்திரேலியத் தொழிற்படையில் அபோரிஜினிகளும், டாரிஸ் நீரிணைத் தீவக மக்களும் முன்னணிப் பதவிகளை வகிக்கின்றனர்.

## Albert Namatjira (1902–59)




Albert Namatjira அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த கலைஞர்களில் ஒருவர், இன்றுவரை தொடர்கின்ற ஒரு கலைப் பள்ளியை இவர் தோற்றுவித்தார். ஆரந்தி பிரிவைச் சேர்ந்த ஆல்பர்ட் இளைஞராக இருக்கும் போதே ஓவியக் கலையில் இயற்கையான திறன் உடையவராய் இருந்தார். சம்பிரதாயப்படியான பயிற்சி ஏதும் இவர் அதிகம் பெற்றிருக்கவில்லை, ஆனாலும் நீர்க்குழலை வண்ணங்களைக் கையாண்டு இவர் தீட்டிய அவுஸ்திரேலிய நாட்டுப்புறத்தை சித்தரிக்கும் ஓவியங்கள் பிரபலமாயிருந்தன அத்துடன் அவை விரைவாக விற்பனையாயின.

இவரும் இவரது மனைவியும் அவுஸ்திரேலியப் பிரசைகளாவதற்கு அனுமதிக்கப்பட்ட முதல் பூர்வீகக்குடி மக்களாவர். வாக்களிக்கவும், ஓட்டல் ஒன்றில் நுழையவும், தாம் விரும்பும் இடத்தில் வீடொன்றைக் கட்டவும் இவர்களால் இயலுமாயிற்று என்பது இதன் அர்த்தம். ஆல்பர்ட்டுக்கு வழங்கப்பட்ட அவுஸ்திரேலியக் குடியுரிமையானது இதர அபோரிஜினிப் பூர்வீகக்குடிகளுக்கு இருக்கவில்லை என்ற உண்மையைக் கோடிட்டுக் காட்டியது.

பூர்வீகக்குடி சாரா அவுஸ்திரேலியர்களுக்கு இனவேற்றுமைச் சட்டங்களின் அநீதியை இவரது வாழ்க்கை உணர்த்தியது, அத்துடன் அபோரிஜினிப் பூர்வீகக்குடிகளது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட உதவியது.

## Eddie Mabo (1936–92)



Eddie Koiki Mabo ஒரு பொதுநல செயல்வீரர் மற்றும் பூர்வீகக் குடிமக்களது நில உரிமை குறித்து கருத்து வெளியிடும் மக்கள் சார்பாளர். இவர் Murray Island தீவிலுள்ள தோர்ஸ் ஸ்டிரெயிட் தீவின் மெரியம் இனப் பிரிவினரத பாரம்பரிய பூமியில் பிறந்தார்.

தமது குடும்ப நிலங்களது எல்லையைக் காட்டும் மரங்களும், கற்பாறைகளும் எவை என்பதை மிகச் சிறு வயதிலிருந்தே இவர் துல்லியமாக கற்றிருந்தார்.

அவுஸ்திரேலிய சட்டத்தின் கீழ் அவரது ஜன்ம பூமி அரசமுடிக்குச் சொந்தமானதாய்க் கருதப்பட்டமை, பல வருடங்களுக்குப் பின்னர்தான் அவருக்குத் தெரியவந்தது. தனது சினத்தை செயலில் காண்பித்த அவர் பரிசோதனையையொத்த தனது வழக்கை ஆரசசயல தீவு மக்களின் சார்பாக நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்.

1992-ல், பல வருடங்களுக்குப் பிறகு, உச்சநீதிமன்றத்தில் எடீயின் வழக்கிற்கு வெற்றி கிட்டியது. தமது பூமியுடன் வரலாறு தொட்டுத் தொடர்ந்துவரும் பாரம்பரியப் பிணைப்பு உள்ளதாக பூர்வீகக் குடிமக்களால் நிரூபிக்க இயலுமெனில், உரிமை கொண்டாடப்படாமல் இருக்கும் பட்சத்தில் அந்த நிலத்திற்கு அம்மக்கள் சொந்தம் கொண்டாடலாம் என மாபோ வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பின் விளைவாக பெரும் நிலப்பரப்புகள் ஆரம்பகாலத்து உரிமையாளர்களுக்கே திருப்பித் தரப்பட்டன.

தனது தைரியத்திற்காகவும், பூர்வீகக்குடி அவுஸ்திரேலியர்களுக்கு நில உரிமைகளை ஈட்டித் தந்தமைக்காகவும் எடீ மாபோ நினைவு கூரப்படுகிறார்.

## புலம்பெயர்வு – படிப்படியான மாற்றங்கள்

1950-களிலும் 1960-களிலும், ஆசிய சமூகத்தினரும், கிருத்துவ தேவாலயங்களும், சமூக அமைப்புகளும் ‘வெள்ளை அவுஸ்திரேலிய’ கொள்கையைக் கைவிடுமாறு கோரிப் போராடின.

1958-ல், கேட்டுச் சொல்லெழுதும் பரீட்சையை அவுஸ்திரேலிய அரசு கைவிட்டது, அத்தடன் 1966 இல் ஐரோப்பியரல்லாத ஆசியக் கண்டத்தினரது திறனடிப்படைப் புலம்பெயர்வுக்கு அவுஸ்திரேலியா தனது கதவைத் திறந்தது. நமது குடிவரவுத் திட்டத்தில் அனைத்து தேசத்தினருக்கும் இடமளிப்பதினால் ஏற்படும் பலனை நாடெங்குமுள்ள அவுஸ்திரேலியர்கள் இறுதியாக உணர்ந்தனர்.

1973-ல் ‘வெள்ளை அவுஸ்திரேலிய’ கொள்கை கைவிடப்பட்டு, பல்கலாசாரப் பாதையில் நாடு நடைபோடத் துவங்கியது. இந்தக் காலத்திலிருந்தே, அரசாங்கம் குடிவரவிற்கான அனைத்து இனவாத வரன்முறைகளையும் அகற்றிவிட்டது. 1975-ல், வியட்நாம் போருக்குப் பின்னர், என்றும் காணாத எண்ணிக்கையில் ஆசிய அகதியர்களையும், புலம்பெயர்ந்தோரையும் அவுஸ்திரேலியா ஏற்றுக்கொண்டது.

1945 ஆம் ஆண்டிலிருந்தே, போரால் சீரழிந்த நாடுகளில் இருந்து வந்த அனேக அகதிகள் உட்பட, அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்காக இலட்சக்கணக்கானோர் வந்திருந்தார்கள். இன்றைக்கு, அவுஸ்திரேலியாவின் குடிவரவாளர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வருகிறார்கள்.

எல்லா இனத்தையும் சார்ந்த எல்லோரும் சமூகத்தின் அங்கமாய் விளங்க வழி செய்யும் ‘அனைவரையும் உள்ளடக்கும்’ கொள்கைத் திட்டம் ஒன்று இன்றைய அவுஸ்திரேலியாவில் நடப்பிலுள்ளது. அவுஸ்திரேலிய கலாசாரத்தின் அனைத்து அம்சங்களிலும் இக்கொள்கையின் செல்வாக்கு காணப்படுகிறது. இது ஆரம்பகால குழந்தைப்பருவக் கல்வியிலிருந்து பல்கலைக்கழக கல்வி வரைக்குமான பாடத்திட்டங்களின் ஒரு அங்கமாகும்.

வேற்றுமைப்படுத்தப்படாமல் சமமாய் நடத்தப்படுவதற்கான ஒவ்வொரு தனிமனிதனது உரிமையை அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையமும், ஒவ்வொரு மாநிலத்திலும், எல்லைப்பகுதியிலும் உள்ள பாகுபாட்டுத் தடுப்பு முகாமைகளும் காபந்து செய்கின்றன. இனவெறிப் பாகுபாடு பகிரங்கமாகக் கண்டிக்கப்படும் செயலாகும், அத்துடன் சட்டத்தின் கீழ் இது ஒரு குற்றமாகும்.

ஒற்றுமையும், அனைவரையும் அரவணைக்கும் பாங்கையும் கொண்டதொரு பல்கலாச்சார சமூகமாக அவுஸ்திரேலியா உருவெடுத்துள்ளது. புலம்பெயர்ந்தோரும், பூர்வீகக் குடிகளும், அவுஸ்திரேலியாவில் பிறந்த ஏனையோரும் தமது இலட்சியங்களை அடைய சாந்தமான வழிகளில் முயலும் ஒரு நாடாகும் இது.

### Dr Victor Chang (1936–91)

Dr Victor Chang அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவராவார். 1936-ம் வருடம் சீனாவில் பிறந்த விக்டர் பீட்டர் சாங் யாம் ஹிம் தமக்கு 15 வயதாகும் போது அவுஸ்திரேலியாவுக்கு வந்தார்.

சிட்னியில் St Vincent’s மருத்துவமனையில் பணியாற்றிய இவர் அங்கு 1984-ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலேயே முதலாவதான இதய மாற்று மையம் ஒன்றை ஸ்தாபித்தார். ‘கம்பேனியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் அஸ்ட்ராலியா’ எனும் அவுஸ்திரேலியாவின் மிக உயர்ந்த விருது 1986-ல் இவருக்கு வழங்கப்பட்டது.

மிகக் குறைவானவர்களே இதயத்தை நன்கொடையாய்த் தர முன்வருவது குறித்து கவலைப்பட்ட விக்டர் செயற்கை இதயம் ஒன்றை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கினார். அவரது முயற்சி ஏறத்தாழ முடிவடையும் தருணத்தில், 1991-ஆம் ஆண்டு துயரகரமான வகையில் இவர் கொல்லப்பட்டார்.

அவரது நினைவாக புது ஆய்வு மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அவரது செயல்திறன், அதீத நம்பிக்கை மற்றும் புதினவாதம் ஆகியவற்றிற்காக அவர் நினைவு கூரப்படுகிறார்.



# முடிவில்

நமது அவுஸ்திரேலிய வரலாற்றின் ஒரு சிறு பகுதியையே நீங்கள் இப்பக்கங்களில் காண்கிறீர்கள். அவுஸ்திரேலியக் குடியுரிமைச் சடங்கிற்கு உங்களை வரவேற்கிறோம், அத்துடன் எமது அமைதி தவழும் ஜனநாயக நாட்டிற்கு நீங்கள் அளிக்கவிருக்கும் முழுப் பங்கேற்பிற்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஒரு குடிமகனாக, நமது பண்டைய கட்டிடங்களில் பொரிக்கப்பட்டுள்ள திகதிகளை நோக்கி அவற்றின் பின்னணியில் பொதிந்துள்ள வரலாற்றுடன் அவற்றை நீங்கள் ஒப்பிடத் துவங்கலாம். நவம்பர் மாதம் 11-ஆம் திகதியன்று பொப்பி மலர் ஒன்றை அணியச் சொல்லி உங்களிடம் ஒருவர் தரும் போது, போரில் வீழ்ந்த நமது வீரர்களையும், வீராங்கணைகளையும் நினைவுகூரத்தான் இப்படி செய்கிறோம் என நீங்கள் அறிவீர்கள்.

# பரீட்சை சாரா பகுதிக்கான சொற்றொகுதி

தூதர்
ஒரு நாட்டை அல்லது ஒரு காரியத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது பிரபல்யப்படுத்துபவர்

வாரியம்
தீர்மானங்கள் எடுப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அடங்கிய குழு, உதாரணமாக ஒரு நிறுவனம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து தீர்மானித்தல்

தங்கிப் பயிலும் பாடசாலை
ஒரு பள்ளிப் பருவம் முழுதும் இல்லங்களுக்குத் திரும்பாமல் மாணவர்கள் தங்கிப் பயிலும் பாடசாலை

புதர்க்காடு
இன்னமும் ஆரம்பத்திய இயற்கை நிலையிலேயே இருக்கும் அவுஸ்திரேலிய நாட்டுப்புறம்

கால்நடை நிறுத்தம்
இறைச்சி உற்பத்திக்கென மாடுகள் வளர்க்கப்படும் பெரிய பண்ணை

உரிமை சாசனம்
உரிமைகள் மற்றும் பொறுப்புகளை எடுத்துக்காட்டும் சம்பிரதாயப்படியான எழுத்து மூலக் கூற்று

பொது ஆர்வம்
மற்றவர்களுடன் ஒத்துப் போகும் ஆர்வங்கள்

போர்க்கால வீரர்
சுயவிருப்பப்படி இராணுவத்தில் சேராத, ஆனால் போர்க் காலத்தில் படையில் சேர்ந்து போரிட நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட இராணுவ வீரர்

அரசமுடிக்குரிய நிலம்
அரசாங்கத்திற்கு சொந்தமான நிலம்

பாடத்திட்டம்
பயில வேண்டிய பாடத் தொகுதி

வறுமையிலுள்ள
வாழ வழியற்ற அல்லது பணமேதும் ஈட்ட வழியற்ற

didgeridoo
நீண்ட குழாய் போன்ற மரக்கட்டையால் ஆன அபொரிஜினி அவுஸ்திரேலியரது இசைக் கருவி

நேர்மையான பங்கேற்பு
பலரும் சேர்ந்து மேற்கொள்ளும் ஒரு குழு முயற்சியில் பங்கேற்றல், அனைவரும் பலனடையும் விதத்தில் விதி முறைகளைப் பின்பற்றுதல், அணியிலுள்ள ஏனையோருடன் ஒத்துழைத்துப் பணியாற்றல்

உயிர் நீத்த இராணுவ வீரர்கள் மற்றும் வீர மகளிர்
போரிலோ அல்லது யுத்தத்திலோ உயிரிழந்த இராணுவ வீரர்கள் மற்றும் வீரமகளிர்

உழன்று முன்னேற்றமடைதல்
நிர்மாணித்தல் அல்லது உருவாக்குதல்

மொத்த உள்நாட்டு உற்பத்தி
ஒரு நாட்டிற்குள்ளாக ஒரு வருடத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒட்டு மொத்த மதிப்பு

அனல்காற்று
இரண்டு நாட்களுக்கும் மேலாகத் தொடர்ந்து நீடிக்கும் அதிகரித்த வெப்ப நிலை

தேச துரோகம்
அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியை உள்ளடக்கிய பெரும் குற்றச் செயல்

சின்னம்
ஒரு மிகச் பிரபலமான பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உருவம்

பூர்வீகுடியினரது ஓவியச் சின்னங்கள்
பூர்வீகக்குடி மக்களைக் குறிக்கும் அவர்களுக்கே உரித்தான கலை

பூர்வீகவாசிகள்
அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்கள்

பெருநிலப் பகுதி
ஒரு பெரும் நிலப்பகுதி

மைல்கல்
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி

பூர்வீகக்குடியினரது உரிமை
அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு உட்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பூர்வீகக்குடி மக்களுக்குள்ள பாரம்பரிய நில மற்றும் நீர் உரிமைகள்

வாய்மொழி வரலாறு
கடந்தகால நிகழ்வுகள் குறித்து மக்கள் சொல்லும் ஞாபகக் கதைகள்

முன்னோடி
தொடக்கநிலைக் கால குடியமர்வு நாட்களில் சாதனை புரிந்த முதல் குடியேறிகளில் ஒருவர்

அரசியல் பிரதிநிதித்துவம்
பாராளுமன்றத்தில் அரசியல்வாதி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படல்

சிறைத் தண்டனை
நீதிபதி ஒருவர் முடிவு செய்த தண்டனை, குற்றம் செய்ததாக தெரியும் ஒருவருக்கு சிறையில் இருக்கும் காலம் போன்றது

வேதன நிர்ணயிப்பு
பணியாட்களுக்குத் தரப்பட வேண்டி நிர்ணயிக்கப்பட்டுள்ள வேதனம

சமூக தீர்திருத்தம்
புரட்சி மூலமாக சாதிப்பதை விட படிப்படியாய் சமுதாய முன்னேற்றங்களை ஏற்டுத்தல்

இராசாங்க இறுதிச்சடங்கு
தேசத்திற்கு முக்கிய சேவை புரிந்துள்ள பிரசை ஒருவருக்கு அரச செலவில் மேற்கொள்ளப்படும் இறுதிச்சடங்கு

தடுப்பரண்
மர முட்டுக் கட்டைகளால் எழுப்பப்பட்ட தடுப்பு அரண்

கால்நடையாளர்
கால்நடைப் பராமரிப்புக்கென அமர்த்தப்பட்டுள்ளவர்கள்

வேலைநிறுத்தம்
தொழிலாளர்கள் தாம் செய்யும் வேலையை நிறுத்துதல், உதாரணமாக முதலாளிகள் எடுக்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து

வாக்குரிமை
பொதுத்தேர்தல்களில் வாக்கு செலுத்துவதற்கான உரிமை

பதவிப் பிரமாணம் எடுத்தல்
சம்பிரதாயப்படியான சடங்கு மூலமாக அரச பதவி ஒன்றை ஏற்றுக்கொள்ளல்

வாழ்வு முறை
சமூகப் பிரிவு அல்லது பின்புலம், செய்யும் தொழில், தகுதிநிலை

# மேலதிகத் தகவலுக்கு

## அவுஸ்திரேலியக் குடியுரிமை

அவுஸ்திரேலியப் பிரசையாவது எப்படி என்பது குறித்து மேலதிகமாய்த் தெரிந்து கொள்ள, அவுஸ்திரேலியக் குடியுரிமை இணையத்தளம் www.citizenship.gov.au எனும் முகவரிக்கு விஜயம் செய்யுங்கள்.

## அவுஸ்திரேலியா

உங்களது உள்ளூர் நூலகத்திலிருந்து அவுஸ்திரேலியா குறித்த மேலதிக விபரங்களை நீங்கள் அறியலாம். கீழ்வரும் இணையதளங்களும் மேலதிக விபரங்களை தரக்கூடும்:

- அவுஸ்திரேலியா, குறித்து www.australia.gov.au
- அவுஸ்திரேலியா, சுருக்கமாக www.dfat.gov.au

## அவுஸ்திரேலிய அரசினது திட்டங்களும் சேவைகளும்

அவுஸ்திரேலிய அரசாங்கதின் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த மேலதிகத் தகவல்களை www.australia.gov.au எனும் இணையதளத்திலிருந்து பெறலாம்.

## கூட்டரசு எம்.பி அல்லது செனெட்டர்

உங்களது உள்ளூர் கூட்டரசு பாராளுமன்ற உறுப்பினர் அல்லது உங்களது மாநில அல்லது எல்லைப்பகுதிக்கான செனட்டர் அவர்களிடமிருந்து அவுஸ்திரேலிய அரசினது திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த பலதரப்பட்ட தகவல்கள் கிடைக்கும்.

எம்.பி மற்றும் செனட்டர்களது அட்டவணை □□□.□□□.□□□.□□ எனும் இணையதளத்தில் காணப்படும்.

## அவுஸ்திரேலிய அரசாங்க அமைப்புகள்

இந்தத் தகவல் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அரசின் நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் பற்றிய மேலதிகத் தகவல்களைக் கீழ்வரும் இணையத்தளங்களில் இருந்து நீங்கள் பெறலாம்:

- அவுஸ்திரேலியப் பாதுகாப்புப் படைகள் www.defence.gov.au
- அவுஸ்திரேலியத் தேர்தல் ஆணையம் www.aec.gov.au
- அவுஸ்திரேலிய கூட்டரசுப் பொலிஸ் www.afp.gov.au
- அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம் www.humanrights.gov.au
- அவுஸ்திரேலிய விளையாட்டுகள் ஆணையம் www.sportaus.gov.au
- அவுஸ்திரேலிய வரியிறுப்பு அலுவலகம் www.ato.gov.au
- அவுஸ்திரேலிய போர் நினைவாலயம் www.awm.gov.au
- அவுஸ்திரேலிய ரிசர்வ் வங்கி www.rba.gov.au

## அரசு சாரா அமைப்புகள்

இந்தத் தகவல் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு சாரா நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் பற்றிய மேலதிகத் தகவல்களைக் கீழ்வரும் இணையத்தளங்களில் இருந்து நீங்கள் பெறலாம்:

- அவுஸ்திரேலிய பிராட்மன் நிறுவனம் www.bradman.com.au
- ஹேம்லின் ஃபிஸ்டுலா இன்ட்டர்நேஷனல் www.hamlinfistula.org
- அவுஸ்திரேலிய ராயல் விமான மருத்துவ சேவை www.flyingdoctor.org.au
- வானொலிப் பள்ளி www.schoolair-p.schools.nsw.edu.au
- ஸ்னோவி மலை நீர்-மின் உற்பத்தி அதிகாரசபை www.snowyhydro.com.au
- ஃபிரெட் ஹாலோஸ் நிறுவனம் www.hollows.org
- யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய மையம் whc.unesco.org
- ஐக்கிய நாடுகள் சபை www.un.org
- விக்டர் சாங்க் இருதய நோய் ஆய்வு நிறுவனம் www.victorchang.edu.au
- அவுஸ்திரேலிய சுயவிருப்பத் தொண்டர் சேவை www.volunteeringaustralia.org

## மற்றவை

கீழ்வரும் தலைப்புகள் குறித்த மேலதிகத் தகவல்களைக் பெற பின்வரும் இணையதளங்களில் தேடுங்கள்:

- அவுஸ்திரேலிய அரசியல் சாசனம் www.aph.gov.au
- ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலியர் விருதுகள www.australianoftheyear.org.au
- ‘அவர்களைத் தாயகத்திற்கு அழைத்து வருவோம்’ அறிக்கை www.humanrights.gov.au
- பொதுநல அரசின் வனப்பகுதிகள் மற்றும் ஒதுக்கப்பகுதிகள் www.environment.gov.au
- இணையப் பாதுகாப்பு www.esafety.gov.au
- வீட்டு அல்லது குடும்ப வன்முறை ஆதரவு www.respect.gov.au, www.1800respect.org.au, www.dss.gov.au/women/help-is-here-campaign
- புகழ்பெற்ற அவுஸ்திரேலியர்கள்: அவுஸ்திரேலிய வாழ்க்கைச் சரித அகராதி - இணையப் பதிப்பு adb.anu.edu.au
- தற்சமயம் பாராளுமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மசோதாக்களின் அட்டவணை www.aph.gov.au
- அவுஸ்திரேலியப் பாராளுமன்றம் www.aph.gov.au
- பாராளுமன்றம் குறித்த கல்வி அளிக்கும் சேவைகள் www.peo.gov.au
- பொது விடுமுறை நாட்கள www.australia.gov.au
- இனவெறி humanrights.gov.au
- பூர்வீகக் குடிகள் மற்றும் தோர்ஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்களிடம் மன்னிப்பு கோரியது www.australia.gov.au

# ஏற்புரைகள்

’சுற்றாடல், நீர்வளம், பாரம்பரியம் மற்றும் கலைகள் திணைக்கள’த்தின் அனுசரணையால் பதினான்கு ‘உலகப் பாரம்பரிய இடங்களது’ படங்களும், கீழ்வருவோரது படங்களும் வழங்கப்பட்டன:

p50 தாஸ்மேனியப் பாலைவனம்

பின்வரும் படங்களை உள்துறை விவகார அமைச்சகம் வழங்கியது:

p5 குடியுரிமைச் சடங்கு, ஆல்பெர்ட் ஹால், கேன்பெரா

p5 அவுஸ்திரேலிய குடியுருமைச் சான்று

p11 புகைப்பிடித்தல் கொண்டாட்டம், கேன்பெரா

p34 அவுஸ்திரேலிய குடியுரிமைச் சடங்கில் ஒரு குடும்பம், கேன்பெரா

பின்வரும் படங்களை, அவுஸ்திரேலிய தேசிய தொகுப்புகள் வழங்கியது:

p51 NSW ஆட்டுச் சொத்தில் குழந்தைகள் – வானொலிப்பள்ளி, புகைப்படம் எடுத்தது 1962 இல் (ref: A1200:L42511)

p60 Dick Smith, பொதுமக்கள் விமானப் போக்குவரத்து ஆணையத் தலைவர், 1991(ref: A6135:K23/5/91/1)

p65 ஆபேல் தஸ்மான் அவர்களின் நியூ ஹாலந்து வரைபடம், 1644 (ref: A1200:L13381)

p68 1851 இல் அவுஸ்திரேலியாவில் தங்க வேட்டை குறித்த வரலாற்றுப்பூர்வப் படம் (ref: A1200:L84868)

p70 ’ஆப்கன்’ ஒட்டகம் ஒட்டுபவர்கள், அவுஸ்திரேலிய உள்ளகப் பகுதியில் (ref: A6180:25/5/78/62)

p77 Sir Edward ‘Weary’ Dunlop அவரது அலுவலகத்தில், 1986 (ref: A6180:1/9/86/12)

p78 ஐரோப்பிய புலம்பெயர்ந்தோர் அவுஸ்திரேலியாவில் வந்திறங்குதல், கெய்ர்ன்ஸில் உள்ள ஃப்ளாமினியாவில் இத்தாலியக் கரும்பு வெட்டும் தொழிலாளி, 1955 (ref: A12111:1/1955/4/97)

பின்வரும் படங்களை அவுஸ்திரேலிய தேசிய நூலகம் வழங்கியது:

P53 Judith Wright அவர்களின் உருவப்படம், பிரசுரித்தது 1940s (ref: nla.pic-an29529596)

p65 சிட்னி கோவில் முதல் கப்பல் தொகுதி, ஜனவரி 27, 1788, ஆக்கியோர் John Allcot 1888 – 1973 (ref: nla.pic-an7891482)

p66 Caroline Chisholm அவர்களின் உருவப்படம், பிரசுரித்தவர் Thomas Fairland 1804 – 1852 (ref: nla.pic-an9193363)

p71 Catherine Helen Spence அவர்களின் உருவப்படம், பிரசுரித்தது 1890s (ref: nla.pic-an14617296)

p74 John Simpson Kirkpatrick மற்றும் அவரது கழுதை, கல்லிப்போலி, 1915 (ref: nla.pic-an24601465)

p76 Sir Charles Edward Kingsford Smith அவர்களின் உருவப்படம், பிரசுரித்தது 1919 மற்றும் 1927 ஆண்டுகளுக்கிடையே (ref: nla.pic-vn3302805)

p81 Namatjira அவர்களின் உருவப்படம் Hermannsburg Mission, Northern Territory-இல், பிரசுரித்தது 1946 அல்லது 1947 -Arthur Groom அவர்கள் (ref: nla.pic-an23165034)

பின்வரும் படங்களை iStock வழங்கியது:

அட்டை Mimosa வசந்த காலப் பூக்கள், ©iStockphoto.com/ST-art (ref: 1135566007)

p6 Lucky Bay, Western Australia-வில் கங்காருத் தாயும், குட்டியும், ©iStockphoto.com/NeoPhoto (ref: 1142608453)

p9 Lake Hume, Victoria, ©iStockphoto.com/tsvibrav (ref: 675826394)

p15 Australian black opal, ©iStockphoto.com/Alicat (ref: 173691056)

p17 Australian Flag, ©iStockphoto.com/davidf (ref: 471630390)

p19 ஒரு பல்-கலாச்சார குழுவின் பெண் பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலை, ©iStockphoto.com/FatCamera (ref: 877714382)

p23 அவுஸ்திரேலிய பாராளுமன்ற சபை, கேன்பெர்ரா, ©iStockphoto.com/felixR (ref: 157193181)

p33 மக்கள் கூடுகை, ©iStockphoto.com/davidf (ref: 913541808)

p36 Gavel And Scales Of Justice, ©iStockphoto.com/studiocasper (ref: 1004781908)

p37 பல்லின மக்கள் கூடுகை, ©iStockphoto.com/SolStock (ref: 1203934273)

p39 கிரீன் வாட்டில் கிரீக் தீவிபத்து NSW, அவுஸ்திரேலியா, டிசம்பர் 2019, ©iStockphoto.com/PetarBelobrajdic (ref: 1198579743)

p47 டிட்ஜெரிடூஸ் கை ஓவியம், ©iStockphoto.com/lore (ref: 185011099)

p48 போண்டி கடற்கரை, சிட்னி, ©iStockphoto.com/Edd Westmacott (ref: 91095176)

p49 சிட்னி ஒபெரா ஹவுஸ், நியூ சவுத் வேல்ஸ், ©iStockphoto.com/slowstep (ref: 607986870)

p50 உலுரு-கட்டா ஜுட்டா தேசியப் பூங்க, வடக்குப் பிரதேசம், ©iStockphoto.com/bennymarty (ref: 1184425004)

p63 உலுரு-வடக்குப் பிரதேசம், ©iStockphoto.com/simonbradfield (ref: :539027478)

p64 பூர்வீகக் குடிகளின் பாறை ஓவியம் – சரட்டோகா மீன், ©iStockphoto.com/Alpen Gluehen (ref: 2761924)

p75 அவுஸ்திரேலியப் போர் நினைவுச் சின்னச் சுவர்கள், கேன்பெர்ரா, ©iStockphoto.com/ Matt Palmer (ref: 1125736631)

## பின்வரும் படங்களை ஷட்டர்ஸ்டாக் வழங்கியவை:

p7 சினி ஹோம்கிரவுண்டு விழாவில் உள்நாட்டு நடனக்கலைஞர்கள் ©shutterstock.com/PomInOz (ref: 345113882)

p21 வாக்காளர், ©shutterstock.com/Nils Versemann (ref: 446229916)

p31 அவுஸ்திரேலிய உயர்நீதி மன்றம், ©shutterstock.com/Greg Brave (ref: 1051621895)

## மற்ற அனைத்துப் படங்களையும் பின்வரும் நிறுவனங்கள்/மக்கள் வழங்கியவையாகும்:

p24 அவுஸ்திரேலிய பொதுநல அரசியலமைப்புச் சட்டம் 1900: பொதுமக்கள் பதிவு மூலப்பிரதி, அனுசரணை பரிசுப் பொருட்கள் சேகரிப்பு, பாரளுமன்றக் கட்டட கலைச் சேகரிப்பு, பாராளுமன்ற சேவைகள் திணைக்களம், கன்பெரா ACT

p40 ஹியர்டு தீவு மற்றும் மெக்டொனால்டு தீவுகள் படம், அவுஸ்திரேலிய அண்டார்டிக் பிரிவு வழங்கியது © அவுஸ்திரேலியப் பொதுனல அரசு, புகைப்படம் எடுத்தவர் L. E. Large (ref:1892A2)

p52 சர் டொனால்டு பிராட்மேன்ப்படம், பிராட்மேன் கிரிக்கெட் மியூசியம். சர் டொனால்டு பிராட்மேன், அவரது அவுஸ்திரேலிய டெஸ்ட் தொப்பியை அணிந்து, 1931-32 ஆண்டின் போது எடுத்தது

p54 Dr Fiona Wood AM பட உதவி National Australia Day Council

p55 பேராசிரியர் ஃபிரெட் ஹால்லோஸ், படம் - ஃபிரெட் ஹால்லோஸ் அமைப்பு, புகைப்படம் எடுத்தவர் ஃபிராங் வியோலி

p56 Dr James Muecke AM பட உதவி Australian of the Year Awards

p56 Professor Michelle Simmons பட உதவி National Australia Day Council

p61 டாக்டர் கேத்தரின் ஹேம்லின் AC புகைப்பட அனுசரணை Hamlin Fistula Relief and Aid Fund

p71 1901-ஆம் ஆண்டு, ஃபெடரேஷன் தின விழாவின் போது திரண்ட மக்கள் கூட்டத்தில் லார்டு லேமிங்டன் உரையாற்றுகிறார். அனுசரணை – குயின்ஸ்லாந்து மாநில தலைமை நூலகம், புகைப்படம H.W. Mobsby (ref: 47417)

p72 Edith Cowan பட உதவி National Museum of Australia

p73 Dorothea Mackellar பட உதவி State Library of NSW

p76 சூப் சமையல்கட்டு, அனுசரணை – நியு+ சவுத் வேல்ஸ் மாநிலத் தலைமை நூலகம் (மிட்ஷல் நூலகம்). இனாமாக வழங்கப்படும் சூப் மற்றும் பான் சீவல் துண்டைப் பெற வடக்கு பெல்மோர் அரச பாடசாலையில் ஆகஸ்டு 2, 1934 அன்று வரிசையாய் நிற்கும் பள்ளிக் குழந்தைகள், புகைப்படம் – சாம் ஹூட்(ref: H&A 4368)

p77 கொக்கோடா பாதையில் காயமடைந்த போர்வீரர் - அனுசரணை அவுஸ்திரேலிய போர் நினைவாலயம (ref: 014028)

p81 எடீ மாபோ – பெர்னிடா மற்றும் கெய்ல் மாபோ அவர்களது அனுமதியுடன் வெளியிடப்பட்டது

p82 டாக்டர் விக்டர் சாங்க், அனுசரணை – விக்டர் சாங்க் இதய நோய் ஆய்வு நிறுவனம்

# குறிப்புகள்

